விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 177 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 31 புதன்கிழமை (14.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## கொலம்பியாவில் 4 குழந்தைகள் உயிர் தப்பியது எப்படி?



3ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் தொடர்பாக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டம் என்ற புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அதற்கான சட்டமூலமொன்றை தயாரிப்பதற்கு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்ற தேர்தல் சட்டம், உள்ளூ 15



## கியூ.ஆர் மூலம் மீன் வாங்கலாம்

(கொழும்பு)

கியூ.ஆர் முறையின் ஊடாக மீனை கொள்வனவு செய்ய நுகர்வோருக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக, இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.பி.உப்புல் தெரிவித்துள்ளார்.

இதன் ஆரம்ப 15

# எமது ஒத்துழைப்பு ரணிலுக்கு அவசியம்

## நாமல் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

பொருளாதார முன்னேற்றம், அரசியல் ஸ்திரத்தன்மை உறுதிப்பாடு ஆகியவற்றுக்காகவே ரணில் விக்கிரமசிங்கவை அரசியலமைப்பின் ஊடாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம். ஜனாதிபதியின் கொள்கைகளை செயற்படுத்த எமது ஒத்துழைப்பு அத்தியாவசியமானது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### மருதங்கேணி விவகாரம்

## மூவர் விசாரணைக்கு பொலிஸாரால் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணியில் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் பொலிஸாருக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் மூவருக்கு கிளிநொச்சி பொலிஸாரினால் விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 15

## நாயுடன் மோ.சைக்கிள் மோதி விபத்து

### குடும்பப் பெண் உயிரிழப்பு

(வவுனியா)

வீதிக்கு குறுக்காக சென்ற நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

செட்டிகுளம், வவுனியாவை சேர்ந்த அலெக்ஸ் ஜூட் ஜென்சிகா (வயது-38) என்பவரே உயிரிழந்தவராவார். 15

## வாகன இறக்குமதி தொடர்பில் அரசு விரைவில் தீர்மானம்

### மகிந்தானந்த அளுத்கமகே எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

வாகன இறக்குமதி தொடர்பில் அரசாங்கம் விரைவான தீர்மானம் எடுக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதிக திட்டமிடல் துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவரும்பாராளுமன்ற உறுப்பின 15

## நல்லைக்கந்தனுக்கு திருக்கல்யாணம்





15

## வாள்வெட்டுக் குழு நவாலியில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நவாலி பகுதியில் வாள்வெட்டுக் குழுவினர் தாக்குதல் நடத்தியதில் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்று இரவு 9.40 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது

நவாலி வடக்கு திருச்சபை வீதியில் உள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்த வாள்வெட்டு குழுவினர் தாக்குதல் நடத்த முற்பட்டவேளை அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

(ம-7,33,104)

## பூநகரி காற்றாலை மின் உற்பத்தி

### அரசியலுக்காக இழுத்தடிப்புக்களை ஏற்க முடியாது – அமைச்சர் டக்ளஸ்



(கிளிநொச்சி)

கௌதாரிமுனை காற்றாலை திட்டத்தின் ஊடாக எமது மக்களுக்கும் நாட்டிற்கும் எவ்வாறான நன்மைகளை கூடியளவு விரைவில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதிலேயே தான் ஆர்வமாக இருப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறுகிய சுயலாப அரசியல் நோக்கங்களுக்காக முன்னெடுக்கப்படும் கால இழுத்தடிப்புக்களை ஏற்றுக்கொள்ள முடி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

கார்/ வான் வாடகைக்கு

கார்கள்/ வான்கள் வாடகைக்கு விடப்படும்.

(15955)

077 898 9691

# ஆனைக்கோட்டையில் கிணற்றில் இருந்து ஆணின் சடலம் மீட்பு

ஆனைக்கோட்டை பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து ஆண் ஒருவரது சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துள்ளார். என தெரிவிக்கப்படுகிறது.

அதே பகுதியைச் சேர்ந்த தெய்வேந்திரன் தேவராஜா (வயது 45 என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7, 104)

# இணையம் மூலம் கடவுச்சீட்டு நாளைமுதல் ஆரம்பம்

(கொழும்பு)

இணையவழி (ஆன்லைன்) மூலம் கடவுச்சீட்டு வழங்கும் பணி நாளை 15ம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், விரும்பும் எவரும் குடிவரவுத் திணைக்களத்திற்கு வந்து விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து கடவுச்சீட்டைப் பெறலாம்

கடவுச்சீட்டு வழங்கும் ஒரு நாள் சேவையும் வழமை போன்று இடம் பெறும் என குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார். (ம-7)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 44 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(15953)

076 733 6047
076 755 8606

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 6 பரப்பு காணி விற்பனைக்கு

- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி)
- கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி

(15953)

076 739 0413
076 436 5814

## 4 ஆவது சிரார்த்த தின நினைவலைகள்



தோற்றம் 03.07.1947
மறைவு 2019.05.31

அமரர்

### அம்பலம் விஜயநாதன்

(ஓய்வு பெற்ற அதிபர் SLPS -I)

கள்ளமற்ற மனமும் களங்கமற்ற அன்பும்
கொண்ட நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
நான்காண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள்
எங்கள் மனதை விட்டு நீங்காது.

மனைவி விஜயநாதன் சாரதாவதி
பிள்ளைகள் வி.செந்தூரன்,
வி.குமரன்,
வி.துவாரகன்

(C-6732)

## மரண அறிவித்தல்



தோற்றம் 09 - 05 - 1964
மறைவு 13 - 06 - 2023

### திருமதி அமுதஜோதி சண்முகசுந்தரலிங்கம்

அச்சுவேலி தம்பாலையைப் பிறப்பிடமாகவும் யாழ். இந்துக் கல்லூரி வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமுதஜோதி சண்முகசுந்தரலிங்கம் (சுந்தரலிங்கம்) அவர்கள் நேற்று (13.06.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசோதிலிங்கம் - கமலாதேவி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகளும் சண்முகசுந்தரலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் சாருகேசி(ஆசிரியர் - யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்), வாகீசன்(முகாமையாளர் -நிர்வாகக்கிளை MAS), திருபுரன்(சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும் கஜன் (தாதிய உத்தியோகத்தர்- யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை), அபிதா(அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் கரைச்சி), கீர்த்தனா(சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் பிரஜன், கவிஸ்னா, துருவன், றியா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் அகில்ஜோதி, அமரர் உதயஜோதி, அருள்ஜோதி, அருணஜோதி(ஆசிரியர்- நவீல்ட் பாடசாலை கைதடி), கமலவேள்(சுவிஸ்), கமலராஜ், திமோதி கமலஸ்ரீ (கனடா) ஆகியோரின் சகோதரியும் அமரர் சுந்தரலிங்கம்(தொழில்நுட்ப உத்தியோகத்தர்), அமரர் மீனாட்சி சுந்தரலிங்கம்(கனடா), பத்மசுந்தரி (லண்டன்), சிவகாமசுந்தரி(லண்டன்), கற்பகமதி, அமரர் கனகசுந்தரலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2023) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (24/3, இந்துக்கல்லூரி வீதி யாழ்ப்பாணம்) நடைபெற்று பூதவுடல் தம்பாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

24/3, இந்துக் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: -குடும்பத்தினர்
077 177 8348

(C-6731)

## மரண அறிவித்தல்



மலர்வு 09 - 02 - 1963
உதிர்வு 13 - 06 - 2023

### சின்னத்தம்பி சந்திரலிங்கம்

(ஓய்வுநிலை ஊழியர் - வலி.வடக்கு பிரதேச சபை)

யாழ்.இன்னாவத்தை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வீசி லேன் கொல்லங்கலட்டியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சந்திரலிங்கம் (ஓய்வுநிலை ஊழியர் - வலி.வடக்கு பிரதேச சபை) அவர்கள் நேற்று (13.06.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - கற்பாத்தை தம்பதிகளின் அன்பு மருமகனும் சந்திரலிங்கம் லோகேஸ்வரியின் (ஆசிரியர் - இளவாலை மெய்கண்டான்) அன்புக் கணவரும் அமிர்தலிங்கம், காலஞ்சென்ற சகுந்தலா தேவி, சுந்தரலிங்கம் (கனடா), காலஞ்சென்ற சிவலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சயந்தினி (யா/மகாஜனக் கல்லூரி), நிஷாந் (யா/மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திலக்சன் (தெல்லிப்பளை தபாலகம்), அகீபன் ஆகியோரின் அன்பு மாமனும் கஜலக்ஷி, கஜானன், துர்க்கா, சாருகா, மாதுளன், மிதுளன் ஆகியோரின் அன்பு சிறிய தந்தையும் மகேந்திரராஜா, மகேஸ்வரி, கணேசமூர்த்தி (ஜேர்மனி), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2023) புதன்கிழமை கொல்லங்கலட்டியிலுள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று மதியம் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வீசி லேன், கொல்லங்கலட்டி,
தெல்லிப்பளை.

தகவல்:- குடும்பத்தினர்
077 704 9650, 077 857 0730

(15949)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமேசான் காட்டில் கொடிய விலங்குகளிடையே

# நான்கு குழந்தைகள் நாற்பது நாட்கள்

## திக்... திக்... நிமிடங்கள்

தென் அமெரிக்காவில் உள்ள பிரேசில், கொலம்பியா, பொலிவியா போன்ற 9 நாடுகளில் பரவிக் கிடக்கும் உலகின் மிகப் பெரிய, அடர்ந்த காடுதான் அமேசான்.

கொலம்பியாவின் ஒட்டு மொத்த நாட்டு மக்களும் எதையோ எதிர்பார்த்து பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது, அந்தக் காட்டுக்குள் "வயர்லெஸ்" கருவிகளில் ஏற்பட்ட இரைச்சலைத் தாண்டி அந்த ஒரு சொல் மட்டும் தெளிவாக திரும்பத் திரும்பக் கேட்டது.

**அதிசயம்... அதிசயம்... அதிசயம்... "**

40 நாட்களுக்கு முன் ஆபத்து நிறைந்த அந்த அடர்ந்த காட்டுக்குள் காணாமல் போயிருந்த நான்கு குழந்தைகள் உயிருடன் இருந்ததைக் கண்டுபிடித்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சியின் வெளிப்பாடுதான் அந்தக் குரல்.



அவர்களைத் தேடிக் கொண்டிருந்த அந்நாட்டு இராணுவத்தினரின் மட்டற்ற மகிழ்ச்சியைத்தான் அந்தச் சொல் வெளிப்படுத்தியது.

### தாயும் நான்கு குழந்தைகளும் எதிர்கொண்ட விமான விபத்து

கடந்த மாதம் 1 ஆம் திகதி அதிகாலையில் அவர்கள் பயணித்த இலகுரக விமானம் அமேசான் காட்டுக்குள் விபத்துக்குள்ளானது. இதையடுத்து, அந்த விமானத்தில் பயணித்த ஹுய்டோட்டோ பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஐந்து பேர் மாயமானதாக அறிவிக்கப்பட்டது.

அந்த இலகுரக விமானத்தில் ஒரு தாயும், அவரது நான்கு குழந்தைகளும் பயணம் செய்துள்ளனர். இந்த விபத்தில் தாய் உயிரிழந்துவிட்டார். இருப்பினும் 13, 9, 4, மற்றும் 1 வயது குழந்தைகள் காட்டுக்குள் தனியாகத் தவித்து வந்துள்ளனர்.

பாம்பு, ஜாகுவார் எனப்படும் சிறுத்தையைப் போன்ற கொடிய உயிரினம், பல வகை விசக் கொசுக்கள் எனப் பல ஆபத்தான உயிரினங்கள் சர்வ சாதாரணமாகக் காணப்படும் பகுதி அது.

அத்தகைய ஆபத்தான அடர்காட்டுக்குள் தொலைந்துபோன நான்கு குழந்தைகளின் நிலையை நினைத்து நாடே வருந்தியது.

அவர்களைத் தேடும் பணிகளை கொலம்பிய அரசு முடுக்கிவிட்டது. இதற்காக அந் நாட்டு இராணுவத்தினர் ஒரு மீட்புக் குழுவையும் அமைத்தனர்.

விமானத்தில் பயணித்தவர்களின் நிலை என்னவாக இருக்குமோ என மீட்புக் குழுவினர் தொடக்கத்தில் அஞ்சினர். ஆனால் காட்டுப்பகுதியில் தென்பட்ட காலத்தடங்கள், பகுதி பகுதியாக உண்ணப்பட்ட காட்டுப் பழங்கள் கிடந்ததை மையமாக வைத்து அவர்களைத் தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் மூலம், விமானத்தில் பயணித்தவர்கள் உயிருடன் இருக்கக்கூடும் என்ற நம்பிக்கை மீட்புக் குழுவினருக்கு ஏற்பட்டது.

அந்தக் குழந்தைகளின் குடும்பம் முக்குடுய் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். வாழ்வில் இத்தகைய அபாயகரமான சூழலில் சிக்கும் நிலை ஏற்பட்டால், அதில் பிழைத்திருக்கும் வகையில் அவர்கள் தங்கள் குழந்தைகளைத் தயார்படுத்தியுள்ளார்கள்.

சிறுவயதிலிருந்தே ஹுய்டோட்டோ மக்கள் வேட்டையாடுதல், மீன்பிடித்தல் மற்றும் காட்டுக்குள் ஒன்று சேர்ந்து வாழ்க்கையை வாழ்வது உள்ளிட்ட பல பழக்கங்களைக் கற்றுக்கொள்கின்றனர்.

தற்போது அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ள குழந்தைகளின் தாத்தா ஃபிடென்சியோ வேலென்சியா செய்தியாளர்களிடம் பேசிய போது, "மூத்த குழந்தைகளான லெஸ்லி மற்றும் சோலினி ஆகியோர் அடர்ந்த காட்டுப்பகுதி குறித்து நன்கு அறிந்தவர்கள்," என்றார்.



கொலம்பிய ஊடகத்திடம் பேசிய குழந்தைகளின் உறவினரான டாமரிஸ் முக்குடுய், எங்கள் குடும்பங்களில், குழந்தைகள் வளரும்போது சிறு வயதிலேயே அவர்கள் அடர்ந்த காட்டுக்குள் "உயிர் பிழைக்க எதிர்கொள்ள வேண்டிய சவால்களை" சந்திப்பதற்குப் பழகிவிடுகின்றனர் என்றார்.

"சிறு வயதில் நாங்கள் காட்டுக்குள் இதுபோல் உயிர் வாழும் விளையாட்டை விளையாடியபோது, சிறிய முகாம்களைப் போல டென்ட்களை அமைத்து விளையாடுவோம்," என்று அவர் தனது இளமைக் காலத்தை நினைவு கூர்ந்தார்.

பதின்மூன்று வயதான லெஸ்லி, "காட்டில் பல நச்சுப் பழங்கள் இருப்பதால், என்னென்ன பழங்களைச் சாப்பிடலாம், எதைச் சாப்பிடக்கூடாது என்று தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தாள். ஒரு பச்சிளம் குழந்தையை எப்படிப் பராமரிப்பது என்றுகூட அவளுக்குத் தெரியும்," என்று தெரிவித்தார்.

அந்த விபத்திற்குப் பிறகு, லெஸ்லி தனது தலைமுடியை நேர்த்தியாக வைத்திருக்கப் பயன்படுத்திய ரப்பர்களின் உதவியுடன், மரக்கிளைகள்ள இணைத்து சிறிய தற்காலிக கூடாரங்களைக் கட்டினார்.



அவர்கள் பயணித்த செஸ்னா 206 விமானத்தின் இடிபாடுகளில் இருந்து ஃபரினா என்ற மாவுப் பொருளையும் அவர் பத்திரமாக மீட்டு வைத்துக் கொண்டார்.

அந்த மாவுப் பொருளைச் சாப்பிட்டே குழந்தைகள் நால்வரும் தங்கள் பசியை ஆற்றி வந்தனர். மாவுப் பொருள் தீர்ந்த பின்னர், சில மரங்களில் இருந்து கிடைக்கும் காய்கள் மற்றும் பழங்களை உணவாக உட்கொண்டு காட்டில் தொடர்ந்து வாழ்ந்திருக்கின்றனர் எனத் தேடுதல் முயற்சியில் பங்கேற்ற பழங்குடி தலைவர்களில் ஒருவரான எட்வின் பாக்கி செய்தியாளர்களிடம் கூறினார்.

> **"பாம்பு, ஜாகுவார் எனப்படும் சிறுத்தையைப் போன்ற கொடிய உயிரினம், பல வகை விசக் கொசுக்கள் எனப் பல ஆபத்தான உயிரினங்கள் சர்வ சாதாரணமாகக் காணப் படும் பகுதி அது.**
>
> **அத்தகைய ஆபத்தான அடர் காட்டுக்குள் தொலைந்துபோன நான்கு குழந்தைகளின் நிலையை நினைத்து உலகமே வருந்தியது."**

"அவிச்சூர் என்று அழைக்கப்படும், பேசன் பழத்தைப் போன்ற ஒரு பழம் அந்த காட்டுப் பகுதியில் உள்ளது" என்றும், "அந்தப் பழத்தைத் தேடி அவர்கள் விமானம் விபத்துக்குள்ளான இடத்திலிருந்து சுமார் ஒன்றரை கி.மீ தொலைவுக்கு அலைந்து அந்தப் பழத்தைக் கண்டுபிடித்தனர்," என்றும் அவர் தெரிவித்தார்.

கொலம்பியா அரசின் சமூக நலத் துறையின் தலைவரான ஆஸ்ட்ரிட் காசெரெஸ், அந்தக் குழந்தைகளுக்கு இதுபோன்ற சோதனை ஏற்பட்ட நேரம் "காட்டு மரங்களில் இருந்த பழங்கள் அனைத்தும் நன்றாகப் பழுத்திருக்கும் காலம்" என்பதால் அவர்களுக்கு எளிதாக உணவு கிடைத்துள்ளது என்று கூறினார்.

ஆனால் அவர்கள் இது போன்ற சூழலில், உயிர் வாழ்வதற்கு மிகப்பெரிய சவால்களை எதிர்கொள்ளும் நிலைதான் இருந்துள்ளது.

"இந்தக் காட்டுப் பகுதிக்கு இன்னும் யாரும் சென்று இது வரை ஆராய்ச்சி செய்ததில்லை. அந்த இருண்ட பகுதியில் இருந்து கொஞ்சம் தொலைவுக்குப் பயணித்தால் அங்கே ஓடும் ஆற்றைத் தாண்டினால் தான் சிறு சிறு குடியிருப்புப் பகுதிகள் உள்ளன."

இது மட்டுமல்லாமல், அந்தக் காட்டுப் பகுதிக்குள் உலவும் ஆயுத கும்பல்கள் மற்றும் பல்வேறு வேட்டையாடி உயிரினங்களிடம் இருந்து தற்காத்துக் கொண்டதுடன், கடுமையான மழை மற்றும் குளிரையும் அந்தக் குழந்தைகள் எதிர்கொண்டிருக்கின்றனர்.

ஒரு கட்டத்தில் அந்தக் குழந்தைகள் காட்டு நாயிடமிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது.

ஆனால், ஒரு பழங்குடி சமூகத்தில் வளர்க்கப்பட்ட 13 வயது சிறுமி, காட்டுப்பகுதியில் அச்சம் சூழ்ந்த அத்தகைய நிலையை எதிர்கொண்டு வாழத் தேவையான பல திறன்களை ஏற்கனவே பெற்றிருந்தது அவர்கள் உயிர் பிழைக்க உதவியிருக்கிறது.

"அந்த அடர்ந்த காட்டுக்குள் வாழ, அந்தக் குழந்தைகள், அவர்களுடைய சமூகத்தில் கற்றுக் கொண்ட விடயங்களையும் மூதாதையர்களிடம் இருந்து பெற்ற அறிவையும் பயன்படுத்தியுள்ளனர்."

எதுவாக இருப்பினும் பச்சிளம் சிறுவர்கள் கொடிய அந்தக் காட்டுக்குள் 40 நாட்கள் வாழ்ந்திருக்கிறார்கள் எனின் இறைவனின் சக்தியும் விமான விபத்தில் இறந்த அந்தத் தாயின் ஆத்மாவும் துணை நின்றிருக்கிறது என்றே கூற வேண்டும். இது போன்ற கடுமையான சூழ்நிலையில் உயிர் பிழைக்கும் யுக்திகளை எமது பிள்ளைகளுக்கும் நாம் கற்றுத்தர முன்வர வேண்டும். அவர்கள் வாழ்வில் என்றோ ஒரு நாள் பயனுள்ளதாய் அமையும்.

-நன்றி BBC-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் இரு அணிகளுக்கும் அபராதம்



லண்டன் கெனிங்டன் ஓவல் விளையாட்டரங்கில் நடைபெற்ற உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் குறிப்பிட்ட ஓவர்களை வீசி முடிக்கத் தவறிய இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் கணிசமான தொகை அபராதம் விதிக்கப்பட்டது.

மந்த கதி ஓவர் விகிதத்திற்காக இந்தியாவுக்கு 100 சதவீதமும், அவுஸ்திரேலியாவுக்கு 80 சதவீதமும் போட்டி கட்டணத்தில் அபராதம் விதிக்கப்பட்டதாக சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்தது.

அவுஸ்திரேலியாவுடனான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்ததுடன் அப் போட்டியில் இந்தியா 209 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

அப் போட்டியில் தனது பிடி சர்ச்சைக்குரிய முறையில் எடுக்கப்பட்டதாக இந்திய துடுப்பாட்ட வீரர் ஷுப்மான் கில், சமூக ஊடகத்தில் விமர்சித்ததற்காக அவரது போட்டி கட்டணத்தில் 15 சதவீதம் குறைக்கப்பட்டது.

நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அவுஸ்திரேலியா 4 ஓவர்கள் குறைவாக வீசியிருந்ததுடன் இந்தியா 5 ஓவர்கள் குறைவாக வீசியிருந்தது என ஐ.சி.சி குறிப்பிட்டது.

இந்திய அணித் தலைவர் ரோஹித் ஷர்மாவும் அவுஸ்திரேலிய அணித் தலைவர் பெட் கம்மின்ஸும் குற்றங்களை ஒப்புக்கொண்டதுடன் விதிக்கப்பட்ட அபராதங்களையும் ஏற்றுக்கொண்டனர். (4)

# ஜூலையில் இந்திய அணி வெஸ்ட் இண்டீஸ் பயணம்



இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் வெஸ்ட் இண்டீசில் சுற்றுப் பயணம் செய்து 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டி மற்றும் ஐந்து 20 ஓவர் ஆட்டங்களில் விளையாடவுள்ளது.

இதற்கான போட்டி அட்டவணையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்டுள்ளது. ஜூலை 12 முதல் 16 வரை முதல் டெஸ்டும், ஜூலை 20 முதல் 24 வரை 2 ஆவது டெஸ்ட்டும் நடைபெறும்.

ஒருநாள் போட்டிகள் ஜூலை 27, 29 மற்றும் ஓகஸ்ட் 1 ஆம் திகதியும், 20 ஓவர் ஆட்டங்கள் ஆகஸ்ட் 3, 6, 8, 12 மற்றும் 13 ஆகிய திகதிகளிலும் நடக்கிறது.

இந்திய நேரப்படி டெஸ்ட் போட்டிகள் இரவு 7.30 மணிக்கும், ஒருநாள் ஆட்டங்கள் இரவு 7 மணிக்கும், 20 ஓவர் போட்டிகள் இரவு 8 மணிக்கும் தொடங்குகிறது. (4)

# ஐ.பி.எல் போட்டிகளை விட உலகக் கிண்ணம் இலகுவானது

— கங்குலி —

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியில் இந்திய அணி தோல்வி அடைந்தது. இதனால், அவுஸ்திரேலிய அணி சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.

இந்தியா தோல்வி அடைந்ததற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகிறது. சர்ச்சை கருத்துகளும் பரவிய வண்ணம் உள்ளது.

இதுதொடர்பாக இந்திய அணியின் முன்னாள் கப்டன் சவுரவ் கங்குலி கூறியதாவது.

உலகக் கிண்ணத்தை வெல்வதை விட ஐபிஎல் கோப்பையை வெல்வது கடினமானது. ஐ.பி.எல் தொடரில் 14 லீக் போட்டிகளுக்கு பிறகுதான் பிளே ஆஃப் விளையாட முடியும். ஆனால், உலகக் கிண்ணத்தில் 4-5 போட்டியில் விளையாடினாலேயே அரையிறுதியில் விளையாடலாம்.

ஐ.பி.எல் போட்டியில் கோப்பையை வெல்ல 17 போட்டிகளை விளையாட வேண்டியிருக்கும் என அவர் கூறினார். (4)



## உலக கிண்ணம்

# ஒக்டோபர் 15 ஆம் திகதி இந்தியா-பாகிஸ்தான் போட்டி




இந்தியாவில் ஒக்டோபர் 5 ஆம் திகதி 50 ஓவர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் தொடங்கி நவம்பர் 19 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

இந்தத் தொடருக்கான போட்டி அட்டவணையை பி.சி.சி.ஐ தயார் செய்து வருகிறது. இந்த நிலையில் வரைவு போட்டி அட்டவணையை பி.சி.சி.ஐ. ஐ.சி.சி-க்கு அனுப்பியுள்ளது. அந்த வரைவு போட்டி அட்டவணை தற்போது வெளியாகியுள்ளது.

அதன்படி ரசிகர்களால் மிகவும் எதிர்பார்க்கப்படும் இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் ஒக்டோபர் 15 ஆம் திகதி அகமதாபாத்தில் நடைபெறும் என் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் அகமதாபாத்தில் தற்போதைய சம்பியன் இங்கிலாந்து நியூசிலாந்தை தொடக்க ஆட்டத்தில் எதிர்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதோடு இறுதிப் போட்டியும் அங்கே நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரையிறுதி ஆட்டங்கள் நடைபெறும் இடங்கள் தெரிவிக்கப்படவில்லை. இந்தியா தனது லீக் ஆட்டங்களை கொல்கத்தா, மும்பை, டெல்லி, பெங்களூர் உள்ளிட்ட 9 மைதானங்களில் விளையாடும். பாகிஸ்தான் ஐந்து நகரங்களில் விளையாடும்.

இந்த வரைவு பட்டியல் உலகக்கிண்ணத்தில் விளையாடும் அனைத்து நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படும். அவர்களின் கருத்துகள் கேட்கப்பட்டு அடுத்த வாரம் இறுதி அட்டவணை வெளியிடப்படும். அகமதாபாத்தில் விளையாட பாகிஸ்தான் ஏற்கனவே ஆட்சேபனை தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (4)

# சீனா சென்ற மெஸ்ஸிக்கு சிக்கல்

சீனாவுக்கு வந்த ஆஜர்டினாவின் கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸி, பீஜிங் துறைமுகத்தில் வைத்து சீன பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

விசா பிரச்சினை காரணமாக மெஸ்ஸியை சீன பொலிஸார் விமான நிலையத்தில் தடுத்து வைத்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

35 வயதான மெஸ்ஸியிடம் இரண்டு ஆஜர்ண்டினா மற்றும் ஸ்பெயின் நாட்டு கடவுச்சீட்டுகள் உள்ளதாகவும், அவர் ஸ்பெயின் நாட்டு கடவுச்சீட்டை பயன்படுத்தி சீனாவுக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், ஸ்பெயின் நாட்டு கடவுச்சீட்டுடன் சீனாவிற்கு வருவதற்கு முன்னர் விண்ணப்பித்த விசாவை வைத்திருப்பது கட்டாயம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.





அதன்படி, மெஸ்ஸியிடம் முன்பு விண்ணப்பித்த விசா இல்லாததால் இந்த சிக்கல் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிவாரணப் பயனாளிகளுக்கு ஜூலை முதல் கொடுப்பனவுகள்

(கொழும்பு)

நிவாரணப் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சுமார் 95% பயனாளிகளின் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தமது டுவிட்டர் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் பொறுப்பு வழங்கப்பட்ட குழு அதனை உறுதி செய்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (4)

# இன்டர்போல் சிவப்பு பட்டியலில் 7 இலங்கையர்கள் உள்ளடக்கம்

(கொழும்பு)

இன்டர்போல் எனப்படும் சர்வதேச பொலிஸாரால் சிவப்பு பட்டியலிடப்பட்டுள்ள நபர்களின் வரிசையில் 7 இலங்கையர்களின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச பொலிஸின் சிவப்பு பட்டியல் வரிசையில் மொத்தமாக 6872 பேரின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

இவ்வாறு தேடப்பட்டு வரும் பட்டியலில் நான்கு இலங்கையர்கள் இலங்கையில் தேடப்பட்டு வருவதாகவும், மூன்று இலங்கையர்கள் வெளிநாடுகளில் இழைத்த குற்றச்செயல்களுக்காக அந்தந்த நாடுகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய சிவப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (4)

# 406 வைத்தியர்கள் நியமனம்

# மருந்து விலைகள் குறைப்பு

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு

**(கொழும்பு)**

**எதிர்வரும் இரண்டு வாரங்களில் சுகாதார சேவைக்கு புதிதாக 406 வைத்தியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் மாதத்தில் தாதியர் சேவைக்காக 2200 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மருந்தின் விலையை நாளை முதல் 16 வீதத்தால் குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், ஒவ்வொரு 03 மாதங்களுக்கு ஒருமுறை மருந்தின் விலை மீளாய்வு செய்யப்படும் எனவும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். (4)



# பல்கலைக்கழகங்களில் ஆசிரியர்கள் பற்றாக்குறை

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் ஆசிரியர் பற்றாக்குறையினால் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக அமைப்பில் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக 11,293 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.

ஆனால், தற்போது 6,677 பேர் மாத்திரமே அந்தப் பணியில் ஈடுபட்டுள்ளதாக கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சாருதத்த இலங்கசிங்க தெரிவித்துள்ளார். (4)

# நாடு ஸ்திரமடைந்த பின்னரே ஜனாதிபதி தேர்தல்

## அமைச்சர் பந்துல

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலை முன் கூட்டியே நடத்துவதற்கான திட்டம் அரசாங்கத்திடம் இல்லை என அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பிலேயே தற்போது கவனம் செலுத்தப்படுகின்றது.

நாடு இயல்பு நிலைக்கு திரும்பிய பின்னர் உரிய நேரத்தில், உரிய வகையில் தேர்தல்கள் நடத்தப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (4)

## ஆசியாவின்

# சிறந்த விஞ்ஞானிகளில் ஐவர் இலங்கையர்கள்

(கொழும்பு)

ஆசியாவின் சிறந்த 100 விஞ்ஞானிகளில் இலங்கையை சேர்ந்த விஞ்ஞானிகள் பட்டியலிடப்பட்டுள்ளனர்.

ஆசிய விஞ்ஞானி சஞ்சிகை ,கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சதுரங்க ரணசிங்க, மொரட்டுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அஷானி சவிந்த ரணதுங்க, கலாநிதி ஆஷா டிவோஸ், கலாநிதி ரொஹான் பெத்தியகொட மற்றும் பேராசிரியர் சந்தன ஜயரத்ன ஆகியோரை ஆசியாவின் சிறந்த 100 விஞ்ஞானிகளில் பட்டியலிட்டுள்ளது.

2016 முதல் ஒவ்வொரு ஆண்டும், ஆசிய விஞ்ஞானி இதழ் ஆசியாவின் மிகச்சிறந்த ஆராய்ச்சியாளர்களின் பட்டியலைத் தொகுத்து வருகின்றது. (4)

# இராசிபலன்

**14.06.2023**
**வைகாசி 31, புதன்கிழமை**
**ஏகாதசி முற்பகல் 10.55 மணிவரை**
**அச்சுவினி பிற்பகல் 3.51 மணிவரை**

**சுபநேரம் -4.23-5.53 மணிவரை**
**இராகுகாலம்-11.53-1.23 மணிவரை**
**ஏகாதசி விரதம்**

**சந்திராஷ்டமம்- உத்தரம், அத்தம்.**

**வளவன்**

**மேஷம்** – வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், கனவுப் பலிதமுண்டு, தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**கடகம்** – வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**துலாம்** – குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** – வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள், நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**ரிஷபம்** – குடும்பத்தினர்களுடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**சிம்மம்** – தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், திடீர் பயணங்கள் ஏற்படலாம், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்** – பொது வாழ்வில் புகழ் கூடும், திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே கைகூடும், செய்தொழில் மேன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**கும்பம்** – நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும், முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** – இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி** – குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ரோக பயமுண்டு.

**தனுசு** – கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவ

**மீனம்** – எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், தொழிலை விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், பக்க பலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், வாக்கு மேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடன் கொடுத்துப்பார் நீ எந்தளவுக்கு முட்டாள் என்று உனக்கே தெரியும்.**

# குருதிக்கொடையாளர்கள் தினத்தை முன்னிட்டு குருதிக்கொடையாளர்கள் கௌரவிப்பு இன்று



(யாழ்ப்பாணம்)

உலக சுகாதார ஸ்தாபனம், இரத்த தானம் செய்வோரை சிறப்பிக்கும் முகமாக இன்று ஜூன் 14 ஆம் திகதியை, உலக குருதிக்கொடையாளர் தினமாக பிரகடனம் செய்து கொண்டாடி வருகிறது.

2005 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வரும் இந் நாள், ABO இரத்த வகையை கண்டுபிடித்து நோபல் பரிசு பெற்றவரான கார்ல் லாண்ட்ஸ் டெய்னெர் பிறந்த நாள் ஆகும். ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொனிப்பொருளில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இம்முறை "உதிரம் கொடுங்கள், குருதிப்பாயும் கொடுங்கள், உயிரைப் பகிர்ந்து கொள்ளுங்கள் அடிக்கடி பகிர்ந்து கொள்ளுங்கள்" எனும் தொனிப்பொருளில் சர்வதேச ரீதியாக கொண்டாடப்படுகின்றது.

இத் தினத்தில் உலகளாவிய ரீதியில் தொடர்ச்சியாக இரத்த தானம் செய்துவரும் குருதிக் கொடையாளர்களும் இரத்த தான முகாம் ஒழுங்கமைப்பாளர்களும் இச் சேவையில் ஈடுபடும் ஊழியர்களும் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

இலங்கையிலும் தேசிய குருதி மாற்று பிரயோக சேவையினரால் இன்று கொழும்பு நாரஹேன்பிட்டி எல்விட்டிகல மாவத்தையில் அமைந்துள்ள தேசிய இரத்த நிலையத்தில் உலக குருதிக்கொடையாளர் தினம் கொண்டாடப்படுகின்றது.

இதில் தொடர்ச்சியாக இரத்த தானம் செய்துவரும் குருதிக் கொடையாளர்களும் இரத்த தான முகாம் ஒழுங்கமைப்பாளர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

வடமாகாண பிராந்திய இரத்த நிலையமாகிய யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியிலும் தெல்லிப்பளை, பருத்தித்துறை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு இரத்த வங்கிகளில் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்து சாதனை படைத்த குருதிக் கொடையாளர் இரத்ததான முகாம் ஒழுங்கமைப்பாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புதிதாக திறந்த இருதய சத்திர சிகிச்சை, சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை போன்ற சத்திர சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் குருதியின் தேவை அதிகரித்துள்ளது. ஆகவே எதிர்காலத்தில் குருதிக்கொடையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும்.

அப்போதுதான் வடமாகாணத்தில் சிறந்த குருதிமாற்று பிரயோக சேவையை மேற்கொள்ள முடியும். எனவே இளைஞர்கள், யுவதிகள் அச்சத்தையும் மூடநம்பிக்கையையும் தவிர்த்து உங்கள் உதிரத்தை தொடர்ச்சியாக வழங்கி வாழ்வை பகிர்ந்து கொள்ள முன்வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (4)




யாழ்ப்பாண சிறைச்சாலையின் 100 ஆவது சிறைச்சாலை பாதுகாவலர் அணியின் 8 ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட வறுமை நிலையில் உள்ள மாணவர்களுக்கு யாழ். பரியோவான் கல்லூரியின் 2004 ஆம் ஆண்டு உயர்தர அணி மாணவன் பெனிநிரோயனின் நிதிப் பங்களிப்பில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:சுபேசன், சிவசாந்தன்)

# 1008 சங்குகளால் நல்லூர் கந்தனுக்கு அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேக தினமாகிய நேற்று செவ்வாய்க்கிழமை காலை சகஸ்ரசங்காபிஷேகமானது ஆலயத்தில் விசேட அபிஷேக பூசைகள் இடம்பெற்று மூலஸ்தானத்திலே வீற்றுள்ள வேல்பெருமானுக்கு அந்தண சிவாச்சாரியார்கள் 1008 சங்குகளால் ஆனந்த அபிஷேகம் இடம்பெற்றது.(4-33)



காரைநகர் பிரதேச மருத்துவமனைக்கு கனடா காரை கலாசார மன்றத்தின் ஊடாக ஒரு தொகுதி மருந்துப் பொருட்கள் நேற்று அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டது. (படம்:- கஜிந்தன், சிவசாந்தன்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2852

**சுபன்**

விதி விளையாடுதுன்னு சொன்னா...



ஸ்கோர் எவ்ளோன்னு கேக்கிறான் சேர்...

**ராகவி**

நான் Monday பிறந்தேன் நீ...
நான் Sunday பிறந்தேன் டி...



சும்மா புழுகாத Sunday லீவு தானே...

**யசோபிகா**

அம்மா இரவு 12 மணிக்கு நாய் குலைச்சா என்னம்மா அர்த்தம்



நம்ம வீட்டு நாய் ஒன்று 12 மணிவரைக்கும் தூங்காம ஃபோன் நோண்டிட்டு இருக்குன்னு அர்த்தம்

**கௌரி**

எல்லோருக்கும் பிடித்த மாதிரி நான் இருக்கனும்னு இறைவனிடம் வரம் கேட்டேன் அவர் சிரிச்சிட்டே சொன்னாரு எனக்கே இன்னும் அந்த வரம் கிடைக்கலன்னு....



**சிறிதரன்**

டீச்சர் : "சீனப் பெருச்சுவர் ஏன் உலக அதிசயங்களில் ஒன்று?"

மாணவன் : "சீன தயாரிப்பிலே அது ஒண்ணுதான் ரொம்ப நாள் உருப்படியா இருக்கு, டீச்சர்"!!???

**லீலா**

சந்தோஷத்தை 1 ரூபாய் இட்லி மாதிரி சின்னதா குடுத்துட்டு; சோகத்தை மட்டும் பேமிலி தோசை மாதிரி பெருசா குடுக்கிறாரு கடவுள்...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அதிகாரசபையாக மாற்றப்படாவிட்டால் ரயில் துறை தனியார் மயமாகும்

### அமைச்சர் பந்துல அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை ரயில் சேவை தனியார் மயமாக்கப்பட மாட்டாது என அமைச் சரவை பேச்சாளர் அமை ச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று முற்பகல் இடம்பெற்ற வாரா ந்த அமைச்சரவை முடிவு களை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டு ள்ளார்.

எவ்வாறாயினும் புகை யிரத திணைக்களம் தொட ர்ச்சியாக நஷ்டத்தை சந்தி த்து வருவதாகவும் எனவே பல மாற்றங்களை மேற் கொள்ள வேண்டும் என வும் தெரிவித்துள்ளார்.

சம்பளம் மற்றும் மேல திக நேர கொடுப்பனவு என ஏற்படும் பாரிய செலவீன ங்கள், திறமையின்மை மற்றும் சுயாதீனமாக தீர் மானம் எடுக்க இயலாமை என்பன திணைக்களத்தின் வீழ்ச்சிக்கு பங்களித்துள் ளதாக அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை துறைமுக அதிகாரசபையில் ஏற்பட்ட மாற்றத்தைப் போன்று புகை யிரத திணைக்களமும் மறு சீரமைக்கப்பட்டு அதிகார சபையாக மாற்றப்பட வேண் டும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரி வித்துள்ளார்.

அவ்வாறு மாற்றம் செய்யப்படாவிடின் ரயில்வே துறை தனியார் மயமாக்கு வதை தவிர அரசாங்கத் திற்கு வேறு வழி கிடை யாது என்றும் குறிப்பிட்டு ள்ளார். புகையிரத திணைக் களத்தை அதிகாரசபையாக மாற்றுவதன் மூலம் அதி காரிகள் சுயாதீனமான தீர் மானங்களை எடுப்பதுடன் பொதுமக்களுக்கு வினை த்திறனான சேவையை வழ ங்க முடியும் என்றும் போக் குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட் டுள்ளார். (4)

# இந்த ஆண்டு இறுதிக்குள் பொருளாதாரம் வலுப்பெறும்

### நிதி இராஜாங்க அமைச்சர்

**(கொழும்பு)**

**இந்த ஆண்டு இறுதிக்குள் நாட்டின் பொருளாதாரம் வலுவடையுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.**

தெஹியோவிட்டை பிர தேசத்தில் இடம்பெற்ற நிகழ் வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இரா ஜாங்க அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கை யில், சர்வதேச நாணய நிதி யம் பல்வேறு கணிப்புகளை முன்வைத்த போதிலும், அத் தகைய கணிப்புகளுக்கு அப் பால் நாட்டின் பொருளா தாரத்தை கடந்த வருடமும் நிர்வகிக்க முடிந்தது.

உலக வங்கியின் கணிப் பீட்டின் அடிப்படையில், இந்த ஆண்டு நாட்டின் பொரு ளாதார வளர்ச்சி விகிதம் மறை 4.2 வீதமென அறிவிக் கப்பட்டிருந்தது.

எனினும், இந்த ஆண்டு நாட்டின் பொருளாதார வள ர்ச்சி விகிதம் மறை 3.0 ஆக இருக்குமென சர்வதேச நாணய நிதியம் கணித்து ள்ளது.

எவ்வாறாயினும், மத்திய வங்கியின் கணிப்பீட்டின் அடிப்படையில் இலங்கை யின் பொருளாதார வளர்ச்சி விகிதம் மறை 2 - 3 இற்கும் இடையில் இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் உற்பத்திக்கான பங்களிப்பை அதிகரிக்க



அனைவரும் உறுதியுடன் செயற்பட வேண்டும். அவ் வாறு செயற்பட்டால், வருடத் தின் இறுதிக் காலாண்டில் நாட்டின் பொருளாதார வள ர்ச்சி விகிதம் சாதகமானதாக இருக்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(4)

## கோழி இறைச்சி விலையால் தொடரும் குழப்பம்

(கொழும்பு)

கோழி இறைச்சி வியாபாரி களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், அடுத்த வாரம் முதல் கோழி இறைச்சி கொள்வனவை புறக் கணிக்கும் செயற்பாட்டை முன் னெடுக்கவுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரி மையாளர்கள் சங்கம் எச்ச ரித்து ள்ளது.

பிஸ்கட் விலை உயர்வைக் கட்டுப்படுத்த எந்த வழிவகை கையாளப்பட்டதோ, அந்த வழிவகை கோழி இறைச்சி விடயத்திலும் கையாளப்படும் என்று அந்த அந்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் குறிப்பிட்டு ள்ளார்.

டொலர் மதிப்பிழப்பால் கிடைக்கும் சலுகைகளை நுகர் வோருக்கு வழங்க வேண்டும் என கோழி இறைச்சி வியா பாரிகளிடம் கோரப்பட்டுள்ளது.

எனினும் தற்போதுள்ள இக் கட்டான சூழலை பயன்படுத்தி அதிக இலாபம் ஈட்டுவதற்கு வியாபாரிகள் முயற்சிக்கின்றனர்.


இதேவேளை, அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சிய டைந்துள்ள போதிலும், இற க்குமதி செய்யப்பட்ட பழங்களின் விலை வெகுவாக அதிகரித்து ள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உள்ளூர் பழவகை களின் விலையும் அதிகரித்து ள்ளதாக அகில இலங்கை சிற்று ண்டிச்சாலை உரிமை யாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். (4)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திரு. இசிதோர் தோமஸ் அல்வின்
அவர்களின் அன்புச்சகோதரன்

அமரர். இசிதோர் அன்ரன்
அமலதாஸ்



அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ஆனைப்பந்தி மெ. மி. வித்தியாலயம்.



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்:165 Cm<br>தகைமை/தொழில்: O/L சொந்தத் தொழில்<br>தொ.இ: B/13574 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 23 1/4<br>உயரம்:160 Cm<br>தகைமை/தொழில்: Canada<br>தொ.இ:G/13681 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 160 Cm<br>தகைமை/தொழில்: A/L கடை வியாபாரம்<br>தொ.இ: B/13585 | பிறப்பு:1998 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்:A/L தையல்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, நிரந்தர தொழில்<br>தொ.இ: G/13683 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா:27<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்: B.Com பின்லாந்து<br>தொ.இ: B/13586 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா:40 1/4<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு, நிரந்தர தொழில்<br>தொ.இ:G/13684 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3 இல் சூரி செவ்<br>கி.பா: 12<br>உயரம் : 176 Cm<br>தகைமை/தொழில்: QS, BSc<br>எதிர்பார்ப்பு: சிறந்த குணமான பெண்<br>தொ.இ: B/13590 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 8 இல் சூரி செவ்<br>கி.பா: 59<br>உயரம்:5' 7"<br>தகைமை/தொழில்: MA மொழியியல் செயற்றிட்ட உதவியாளர்.<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ:G/13689 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் பதில் தாக்குதலுக்கு பக்க பலமாக இருப்போம்

## பிரான்ஸ், ஜேர்மனி, போலந்து அறிவிப்பு

(கீவ்)

**உக்ரைன் கடந்த சில நாட்களாக ரஷ்யாவுக்கு எதிராக பதில் தாக்குதல் நடத்தி வருகிறது. பல முனை களில் இருந்து தாக்குதல் நடத்துவதால் ரஷ்யப் படை கள் சில இடங்களில் திணறி வருகிறது. இதனால் ஏழு கிராமங்களை மீண்டும் கைப் பற்றியுள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.**

இந்த நிலையில் நேற்று முன்தினம் உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்குவது மற்றும் ஜுலை மாதம் நடைபெற இருக்கும் நேட்டோ மாநாடு குறித்து ஆலோசனை நடத்த பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் போலந்து ஜனாதிபதிகள் கலந்து கொண்டு பேசியுள்ளனர்.

மூன்று தலைவர்களின் சந்திப்பு உக்ரைனுக்கு ஆதரவு என்பதை உறுதியளித்தது. இதுத்தொடர்பாக பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் கூறுகையில், "இந்த எதிர்தாக்குதல் பல மாதங்கள் இல்லாவிட்டாலும், பல வாரங்கள் நடைபெறனாம்.

போர் தொடங்கியபோது, நாங்கள் வரையறுத்த எல்லைக்குள் எல்லாவற்றையும் செய்துள்ளோம். வரும் நாட்களில், வாரங்களில் தொடர்ந்து உக்ரைனுக்கு ஆயுதங்கள், வெடிப்பொருட்கள், இராணுவ வாகனங்கள் வழங்கப் படும். இந்த எதிர்தாக்குதல் வெற்றிகரமாக இருக்க வேண்டும். அதன்மூலம் புடின் உடன் பேச்சுவார்த்தை தொடங்க முடியும் என பிரான்ஸ் நம்புகிறது எனத் தெரிவித்தார்.

போலந்து ஜனாதிபதி டுடா உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை தொடர்ந்து கொண்டு, "எங்களுடைய ஆதரவுடன் இந்த எதிர்தாக்குதலில் வெற்றி பெற முடியும் என நம்புகிறேன்" எனத் தெரிவித்துள்ளார். ஜேர்மன் ஜனாதிபதி ஷோல்ஸ் "இந்த போரில் தனது திட்டம் தோல்வியடைந்து விட்டது. 16 மாதங்களாக நடைபெறும் போரை முடிவுக்கு கொண்டு வரலாம் என புடின் சிந்திக்க வேண்டிய நேரம் இது. அவர் துருப்பு களை திரும்பப் பெற்று இறுதியாக நியாயமான பேச்சு வார்த்தைக்கு வர வேண்டும்" எனத் தெரிவித்தார்.

ஆனால், மூன்று தலைவர்களும் நீண்ட கால பாதுகாப்பு உத்தரவாதம் குறித்து பேச மறுப்பு தெரிவித்துவிட்டனர். (4)

## அதிக வெப்பத்தால்

# அமெரிக்க கடற்கரையில் கரையொதுங்கிய மீன்கள்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள வளைகுடா கடற்கரையில் திடீரென மீன்கள் செத்து கரை ஒதுங்கியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து கடல்சார் நிபுணர்கள் மற்றும் உள்ளூர் அதிகாரிகள் அந்த பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது வெதுவெதுப்பான நீரே இவ்வளவு மீன்களின் இறப்புக்கு காரணம் என்பது தெரிந்தது.

குளிர்ந்த நீரில் அதிக அதிக ஒக்ஸிஜன் இருக்கும். ஆனால் வெதுவெதுப்பான நீரில் ஒக்ஸிஜன் அவ்வளவாக இருக்காது. தண்ணீரின் வெப்ப அளவு 70 டிகிரி பாரன்ஹீட்டுக்கு மேல் செல்லும் போது அதில் ஒக்ஸிஜன் குறைகிறது.

அதை விட முக்கியமாக ஆழமான தண்ணீரை விட ஆழமற்ற பகுதியில் உள்ள தண்ணீர் அதிவேகத்தில் வெப்பமடையும். அந்த பகுதியில் தண்ணீர் செல்லும் போது ஒக்ஸிஜன் பற்றாக் குறையால் மீன்கள் பாதிப் படைந்து, ஒழுங்கற்ற முறையில் அதிவேகமாக, இயல்புக்கு மாறாக செயற்படும்.

ஒக்ஸிஜன் அளவு மேலும் குறைந்து மீன்கள் இறந்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (4)

# மேக்கப்பால் தாயை அடையாளம் காணாது அழுத சிறுவன்

## வைரலாகும் வீடியோ



தாயை அடையாளம் காண முடியாமல் மகன் அழுகின்ற காணொளி தற்போது சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

தாயொருவர் மேக்கப் போட்டுக்கொண்டு தனது மகனிடம் வந்தபோதே இவ்வாறு அடையாளம் காண முடியாமல் மகன் அழுகின்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த காணொளியில் தன் அம்மா பியூட்டி பார்லருக்குச் சென்று அங்கு மேக்கப் போட்டுக் கொண்டு வந்த போது அவரைப் பார்த்த மகன் அவரை அடையாளம் காண முடியாமல் கதறி கதறி அழுகின்றார்.

உடனே அவரது தாய் நான் தான் உன் அம்மா என்று கூறும் நிலையில் சிறுவனை ஆறுதல் செய்ய முயன்றாலும் தன் தாயைக் காணவில்லை என்று சிறுவன் கதறி அழுதுள்ளான். (4)

# பாகிஸ்தானில் கனமழை 34 பேர் உயிரிழப்பு!

(இஸ்லாமபாத்)

கடந்த சில நாட்களாக பாகிஸ்தானில் கனமழை பெய்து வருகிறது. இதனால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி இதுவரை குழந்தைகள், பெண்கள் உட்பட 34 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அந்நாட்டு பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் இரங்கல் தெரிவித்துள்ளார்.

பேரிடர் குழுவால் 100 இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

பன்னு, டேரா, கரக் மற்றும் லக்கி மார்வார்ட் ஆகிய பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதில் சுமார் 70 வீடுகள் இடிந்து விழுந்து சேதமாகியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (4)

# உக்ரைனின் எதிர்த் தாக்குதலால் போர் முடிவுக்கு வரும்

## அமெரிக்கா நம்பிக்கை



(கீவ்)

உக்ரைன் - ரஷ்யா போரானது ஓராண்டுகளை கடந்து இடம்பெற்று வரும் நிலையில், கெர்சன், டொனெஸ்க் பிராந்திய ரஷ்யா தன் வசமாகியுள்ளது.

மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு தொடர்ந்தும் ஆயுத உதவிகளை வழங்கி வருவதால் இழந்த இடங்களை மீட்பதற்காக உக்ரைன் எதிர்த்தாக்குதலை நடத்தி வருகின்றது.

அந்த அடிப்படையில் தற்போதைய நிலவரப்படி ஏழு கிராமங்களை உக்ரைன் மீட்டுள்ள சூழலில் எதிர்த் தாக்குதலில் இது கூறத்தக்க முன்னேற்றம் என உக்ரைன் நம்புகின்றது.

சில பகுதிகளில் அனைத்து திசையிலும் இருந்து உக்ரைன் பதிலடி கொடுப்பதால் ரஷ்ய வீரர்களால் அதை எதிர்கொள்ள முடியாமையால் அவர்கள் பின் வாங்க வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில், உக்ரைனின் வெற்றிகரமான பதிலடி தாக்குதல் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைக்கு ரஷ்ய ஜனாதிபதி புடினை தள்ளும் என்று அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் பிளிங்கன் தெரிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேகாரோக்கியமாக உண்ணுதலை வழக்கப்படுத்திக்கொள்ளல் வேண்டும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

குழந்தைகளை இன்னும் இளைய தலைமுறையை முன்னோக்கி அவர்களின் செழுமையான வாழ்வுக்காக தேகாரோக்கியமான உண்ணுதல் அறிமுறையாகியிருக்கின்றது. தேகாரோக்கியமான உணவு என்பது சமமான அனைத்து ஊட்ட்ச்சத்துக்களும் வேண்டியளவில் கிடைக்கும்உணவென கூறினாலும் அதனை தேவைக்கேற்ப உண்பதுவும் இதனுள் அடக்கம். குறிப்பாக தேகாரோக்கியமாக வாழ்வதற்கு தேகாரோக்கியமான உண்ணுதல் அவசியம்!

தேகாரோக்கியமான உணவு என்பதனைப் பற்றி பல கட்டுரைகளில் பலவாறு கலந்துரையாடியிருக்கின்றோம். அதனையும் தாண்டி தேகாரோக்கியமான உண்ணுதல் (Healthy eating a habit) என்பது தற்போது உலக உணவு தாபனத்தின் சமகால பரிந்துரைப்பும் உலக மக்களை இதற்குத் தயார்ப்படுத்தலுமாகும். அவர்களின் இந்த முயற்சிக்கான சிறிதான பங்களிப்பாக இக்கட்டுரை உங்களை வந்தடைகின்றது. இதிலென்ன புதுமை இருக்கின்றதென அனைவரும் அங்கலாய்ப்பது தெரிகின்றது. எமக்கான உணவை நாம் எமது தேவை கருதி அளவாக அதற்குரிய நேரத்தில் உண்ணுகின்றோமா என சற்று மௌனித்து சிந்தித்துப் பார்த்தால் நாமே பல வியாதிகளுக்கும். எம்முடம்பில் எழும் பிரச்சினைக்கும் காரணமாக இருக்கின்றோம் என கண்டு கொள்ளலாம். விரைந்து செல்லும் உலக நடப்புகளோடு எம்மையும் அதற்குள் ஒரு வழியாக திணித்து விடுகின்றோம் என்று தான் கூறவேண்டும். காலச் சக்கரத்தோடு நாமும் நகர்ந்தாக வேண்டும் என்றொரு கட்டாயப்படுத்தல் அனைவருக்கும் உண்டு. அதனால் ஒரு சிலர் உடல் அளவுக்கதிகமாக வீங்கிகாலையும் மாலையும் நேரங்கிடைக்கும் போதெல்லாம் இடையிலும் உடலை ஒரு மாதிரியாக குறைக்கவென பல விதமான உடற்பயிற்சிகள்ளயும் நடைப் பயிற்சிகளையும் செய்வதனை பார்க்கலாம்.

ஆனால் விவசாயிக்கு உடற் பயிற்சிக்கு நேரமேது. வயல் நிலங்களை சுற்றிப் பார்ப்பதும் வயல் நிலத்தில் வேலை செய்வதும் முழுமையாக பயிற்சியாக இருப்பதனால் இவ்வாறான உடலை இளைக்கும் பயிற்சிகளுக்குள் வலிந்து செல்வதில்லை. ஆனாலும் கிரமமாக உடற்பயிற்சியை தேவைக் கேற்ப செய்து உணவிலும் கவனமாக இருப்பவர்கள் தமது உடலினை ஒரு கட்டுக் கோப்பாக வைத்திருப்பதனை காணலாம். இவ்வாறான பல விடயங்களைப் பற்றிப் பார்த்தாலும் எமது உடலுக்கு தேவையான உணவை ஊட்டச்சத்துள்ளதாக உண்ணும் பழக்கத்தையும் அளந்தறிந்து உண் என்பது போல தேவையறிந்து முன்னர் உண்டது செமித்த பின்னர் தொடர்ந்து உண்ணுவதை நினைத்துப் பார் என்பதாக இந்த ஆலோசனைகள் உருக்கொண்டிருக்கின்றன.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




இயந்திர வாழ்க்கைக்குள் சிக்கியிருக்கும் நாமெல்லோரும் உணவை திணிப்பதிலேயே கவனத்தை திசை திருப்பியிருக்கின்றோம் என்பதனை அனைவரினதும் வயிறு ஊதிப் பெருத்திருப்பதிலிருந்து காணக் கூடியதாயிருக்கின்றது. அளவுக்கதிகமான உணவு செரிமானமானது போக மீதி கொழுப்புடலங்களாக உமது உடலில் தேவையற்று சேமிக்கப்படுகின்றது. வழமையாக சேமிப்பென்பது எமக்கு தேவையான போது அல்லது எந்த நேரத்தில் தேவைப்படுகின்றதோ அந்த நேரத்திற்குரியதானதாக இல்லாது அதிகமாக உடலுக்குள் செல்வதனால் இந்த நிலை. நாம் உள்ளெடுக்கும் உணவானது சேமிப்பதற்கு மாறாக அதிகளவில் தங்கி விடுவது எமது உடலுக்கு என்றும் நல்லதல்ல.

உலகளாவிய ரீதியில் 149மில்லியன் குழந்தைகள் ஐந்து வயதிற்கு குறைந்தவர்களாக இருப்பதும் ஆனால் வளர்ச்சி குறைவானதாக சராசரி அந்த வயது குழந்தைகளுடன் ஒப்பிடும் போது சிறியவர்களாக இருப்பதும் கவனிக்கப் பட்டு ள்ளது. 40 மில்லியன் குழந்தைகள் சராசரி நிறையைவிட அதிகரித்த நிறையிலுள்ளவர்களாவர்.

இதில் துன்பத்திற்குரிய செய்தியென்னவெனில் இன்னும் கணக்கிலில்லாத குழந்தைகள் ஊட்டச்சத்து அற்றவர்களாக இன்னும் ஊட்டச்சத்து நலிவானவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். இவ்வாறான குழந்தைகளுக்கு தொற்று நோய்கள் இலகுவில் தொற்று ஏற்படும் சந்தர்ப்பங்கள் அதிகமானதாக இருக்கின்றது. எமது நாட்டில் தொற்று நோய்கள் பல மாதிரி பல அளவுகளில் இருக்கின்றன. ஆனாலும் நாம் தொற்று நோய்கள் விடயத்தில் மிகவும் கவனமாக இருத்தல் அவசியானதாகும்.

ஊட்டச்சத்து குறைவான பிள்ளைகள் பாடசாலைக்கு சென்றாலும் அவர்களால் சிறப்பாக பாடத்தை கவனிக்கவோ படிக்கவோ இன்னும் துணிவாக பிற விளையாட்டு மற்றும் கலைநிகழ்வுகளில் பங்குபற்றவும் இயலாமல் போய்விடுகின்றது. ஊட்டச்சத்து குறைவாக உணவை உண்பதால்உடலுக்கு தேவையான் சத்துக்களை பெறமுடியாமல் நோய்வாய்ப்பட்டவர்களாகவே வாழுகின்றனர். சிறுபிள்ளைகளுக்கான உணவினை இயற்கையான ஊட்டச்சத்துக்கள் அனைத்தும் உள்ளதாக உண்ணக் கொடுக்கும் போது அவர்களின் உடலிலேயே நோயெதிர்ப்பு சக்தி பெருகிவிடும். ஆதலினால் அனைவரினதும் உயிர்களை காப்பாற்றக் கூடியதாகும்.

இத்தகைய நிலையில் தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச அதிபரினால் வெள்ளிக்கிழமை மாலையும் ஞாயிற்றுக் கிழமையும் தரம் 9 வகுப்புக் கீழுள்ள மாணவர்களுக்கு தனியார் வகுப்புக்கள் தடைசெய்யப்பட்டிருப்பது மிகவும் வரவேற்புக்குரியது. மாணவர்களுக்குரிய சுய கற்றலுக்கானதும் அவர்களை சமய நெறிகளுக்குள் வளப்படுத்தி கட்டுக்கோப்பானவர்களாக நெறிப்படுத்தப்பட்டவர்களாக வளர்வதற்கான சந்தர்ப்பங்கள் இவ்வாறான துணிச்சலான முடிவுகளால் எய்தப்படும் என்பதனைநாம் கூறலாம். குடும்பத்துடன் இருந்து அவர்களது சுக துக்கங்களில் பங்கெடுக்கும் பிள்ளைகளாக சமூகப் பொறுப்புடையவர்களாக பொது நலனில் அக்கறை கொண்டவர்களாக வளர்த்தெடுக்க வேண்டும்.

எட்டயபுரத்து பாரதியின் ஓடிவிளையாடு பாப்பா ஓய்ந்திருக்கலாகாது பாப்பா கூடி விளையாடு பாப்பா... என்றும் காலை முழுதும் படிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு, மாலை முழுதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்திக் கொள்ளுபாப்பா என்றால் எங்கே இதனை செய்வது என அந்த பிள்ளை எங்களைப் பார்த்து வினவுகின்றது. ஓடு ஓடு ரியூசன் அங்கே இங்கே என ஓடி இறுதியில் பிள்ளைக்கு படிப்பதற்கே வெறுப்பு வந்து விடுகின்றது.

உண்ணுகின்ற உணவை செரிமானமடைய விட அதற்காக பிள்ளை சிறியளவிலான உடற்பயிற்சி செய்தல் வேண்டும். அதனை தமது வீட்டிலோ கிராமத்திலுள்ள விளையாட்டு நிலையத்திலோ இன்னும் வணக்கத் தலங்களிலோ அவர்களுக்கான சுதந்திரத்தை ஏற்படுத்திக் கொடுக்கலாம். விஞ்ஞான தொழினுட்ப வளர்ச்சி அதிலும் இணைய தொழினுட்பம் மற்றும் மொபைல் தொழினுட்பம் என்பன பிள்ளைகளை வீட்டிற்குள்ளே இன்னும் அறைக்குள்ளே அடக்கியொடுக்கியிருக்கின்றன.

இதனால் இளையவர்களிடையே உளநலம் சார்ந்த பல பிரச்சினைகள் எழ ஆரம்பித்து விட்டன. கற்பதும் மொபைல் போனுக்குள்ளே அடங்கிவிட முயல்கின்றது.

இவ்வாறான சமூகப் பிரச்சினைகளை நாம் சரியான விதத்தில் எதிர்கொள்ளத் தவறினால் எமது வருங்கால சந்ததி தடுமாறி பல சமூகப் பிறழ்வான காரியங்களில் ஈடுபடும் வாய்ப்புக்கள் அதிகமாகிவிடும்.

தம்மையே மறக்க தற்போது போதைப் பொருள் வர்த்தகம் அதிகளவில் உருப்பெருத்திருக்கின்றது. பெற்றோர்கள் இந்த விடயத்தில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டியது மிகமிக அவசியம். பொருளாதார சிக்கலில் உழன்று கொண்டிருக்கும் குடும்பங்களினால் தங்களது பிள்ளைகளுக்கு தேவையான் பணத்தை வழங்க முடியாத போது அவர்கள் இன்னொருவரில் தங்கியிருக்கும் நிலை எழுகின்றது. இது ஆரோக்கியமானதாக இல்லை. மாணவ மாணவியர்களை பாலியல் வன்முறைக்கும் இது மெதுவாக இழுத்துச் செல்ல அதிகம் வாய்ப்புக்கள் உள்ளன. சமூக அக்கறையுடனான எதிர்காலத்தை நாம் இன்று கட்டியமைக்காவிட்டால் இந்த பிரச்சினைகள் பூதமாகாரமாக எழுந்தபின் எதுவும் செய்ய முடியாது. வருமுன் காப்போம் என்பதனை மீண்டும் நினைவில் கொள்ளல் அவசியம்.

பிள்ளைகளுக்கான ஊட்டச்சத்தான உணவை அவர்களின் உடலுக்கேற்ப உண்ணப் பழக்குதல் அவசியம். நல்ல பழக்க வழக்கங்களை சிறுவயதிலிருந்தே பழக்கப்படுத்திக் கொண்டால் அது அவர்களது வழக்கத்திற்கு வந்துவிடும். அதற்கான வாய்ப்புக்களை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். விஞ்ஞான தொழினுட்ப வசதிகள் வந்த பின்னும் எமது பாரம்பரிய விளையாட்டு அதில் குதூகலிக்கும் நிலைமைகளை எமது பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியம். தேகாரோக்கியமான உண்ணுதலுக்கு முன்னுரிமை கொடுத்து பிள்ளைகளின் தனிமனித சுகாதாரம் மற்றும் தேகாரோக்கியம் என்பவற்றில் எமது கரிசனை முற்றுமுழுதாக இருக்க நாம் அவர்களின் வாழ்வியல் முறைகளை ஒழுக்கத்தை முழுமையாக வடிவமைத்துக் கொடுக்க வேண்டும். இதுவே வளமான எதிர்கால சந்ததியை உருவாக்குவதற்கு அடித்தளமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வவுனியா ஒருங்கிணைப்பு கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் ஆராய்வு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தின் இவ்வருடத்திற்கான இரண்டாவது ஒருங்கிணைப்பு குழு கூட்டம் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான குலசிங்கம் திலீபன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது, வவுனியா மாவட்டத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் கால்நடைகள் திருட்டு அது தொடர்பில் மக்களுக்கு பொலிஸார் மீதான நம்பிக்கையின்மை, வவுனியா மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள சிலைகள் வைப்பதற்கான சட்டவிரோத கட்டடங்களை நகரசபை அகற்றுமாறு விடுத்த கோரிக்கைகள், வீரபுரம் பிரதேசத்தில் சிலர் சட்டவிரோதமாக காணிகளை அடாத்தாக கையகப்படுத்தல், கடவுச்சீட்டு அலுவலகத்திற்கு முன்பாக சட்டவிரோதமான முறையில் இடம்பிடித்து பணம் பெறல் மற்றும் போதைப் பொருள் விற்பனை, வவுனியா மருத்துவமனையில் மருந்தாளர்கள் பற்றாக்குறை மற்றும் வவுனியாவில் தனியார் மருந்தகங்களில் அங்கீகரிக்கப்பட்ட மருந்தாளர்கள் இன்மை போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டிருந்ததுடன், அது தொடர்பானசிலதீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. (4-250)

## சிறுபோக நெற்பயிர்களில் பரவும் நாவா பூச்சி இனத் தாக்கம்

(தருமபுரம்)

**கிளிநொச்சி ஆனைவிழுந்தான் குளத்தின் கீழ் சிறுபோக நெற் செய்கைகளில் நாவாப் பூச்சி இனத்தின் தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது.**

குறித்த நோய்த் தாக்கம் காரணமாக நெற்க் கதிர்கள் நெல் மணிகள் அற்ற பதர்களாக காணப்படுவதாக அப் பகுதி விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ள னர்.

அத்துடன் கிருமி நாசினி விசிறியும் எந்த பயனும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

குறித்த நோய்த் தாக்க த்தை வன்னே ரிக்குளம், அக்கராயன் குளம் விவசாயப் போத னாசிரியர்கள் நேற்று முன்தினம் வருகை தந்து பார்வையிட்டனர். குறித்த நோய் தாக்கம் தொடர்பில் விவசாயிகள் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதுடன் வேப்பெண்ணெய் மற்றும் பூச்சிகளை விரட்டும் மணம் உடைய கிருமி நாசினிகள் பயன்படுத்த வேண்டும் என அறிவுத்தல்களும் வழங்கினர். (4-316)



## கிளிநொச்சி மாவட்டத்தில் 8000 சிறுவர்களுக்கு போசாக்கு குறைபாடு!

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒன்று முதல் ஐந்து வயதுக்கு உட்பட்ட சுமார் எண்ணாயிரம் முன்பள்ளி சிறார்கள் போசாக்கு குறைவு காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாகாணத்தில் 5 வயதுக்குட்பட்ட சிறார்களின் போசாக்கினை அதிகரிப்பதற்கான 6 மாத காலத்திற்கான சத்துமா வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் அதற்கான நிதி மூன்று மாதங்களுக்கு மட்டுமே போதுமானதாக காணப்படுகின்றது.

எனவே மிகுதியாக காணப்படும் மூன்று மாதங்களுக்கு தேவையான நிதியினை பாராளுமன்ற உறுப்பினர்கள், அல்லது கிராம மட்ட பொது அமைப்புகள் அதற்கான நிதியினை வழங்க முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-315)

## சீமெந்து ஏற்றிச் சென்ற கனரக வாகனம் குடை சாய்ந்து விபத்து



(புத்தளம்)

புத்தளம் பாலாவியிலிருந்து கொழும்பு பேலியகொடை பகுதிக்கு கட்டட வேலைக்காக சீமெந்து ஏற்றிச் சென்ற கனரக வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி டெலிகொம் தொலைப்பேசி தொடர்பு கம்பத்தையும் உடைத்துக் கொண்டு தனியார் ஒருவரின் காணிக்குள் சென்று குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்து பாலாவி பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தில் சாரதி மற்றும் உதவியாளர் இருவரும் அதிஷ்டவசமாக உயிர்த் தப்பியுள்ளார்கள்.

குறித்த விபத்திற்கான காரணம் வாகனத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகி குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

டெலிகொம் தொலைபேசி தொடர்பு கம்பம் உடைந்தமையினால் தொலைப்பேசி தொடர்பு பாலாவி, கல்லடி, அட்டவில்லு ஆகிய பகுதிகளில் நேற்று அதிகாலை முதல் துண்டிக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக புத்தளம் பொலிஸார் இதன் போது தெரிவித்தனர். (4)

## மடு அன்னையில் ஆடி திருவிழா முன்னாயத்த கலந்துரையாடல்

(மன்னார்)

மருதமடு அன்னையின் ஆடித் திருவிழா குறித்து அரச அதிபர் தலைமையில் ஆராயப்பட்டுள்ளதாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி.கிறிஸ்து நாயகம் தெரிவித்தார்.

மன்னார் மறை மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற மருதமடு அன்னையின் ஆடி மாத திருவிழாவை முன்னிட்டு முன் ஏற்பாடுகள் குறித்து விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது.

"எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி இடம்பெற உள்ள மடு அன்னையின் ஆடி திருவிழாவிற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய குறித்த கலந்துரையாடலில் மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்கள், பாதுகாப்பு தரப்பினர் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி.கிறிஸ்து நாயகம் அடிகளார் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதாரம்,மருத்துவம்,குடிநீர் ,போக்குவரத்து, பாதுகாப்பு, உணவு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

இம்முறை சுமார் 3 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் ஆடி திருவிழாவில் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

இம்மாதம் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆடி மாத திருவிழா ஆரம்பமாகும் என தெரிவித்தார். (4-255)

## யாழ். நோக்கி பயணித்த கனரக வாகனம் விபத்து

### பளையில் சம்பவம்



(முறிகண்டி)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முல்லையடி பகுதியில் யாழ்நோக்கி சென்று கொண்டிருந்த கனரக வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

யாழ்நோக்கி சென்று கொண்டிருந்த கனரக வாகனம் ஏ9 வீதி அருகே முல்லையடி பகுதியில் மின் கம்பத்துடன் மோதி, வீட்டின் மதில் மேல் விழுந்து விபத்துகுள்ளானது.

இச்சம்பவமானது நேற்று காலை 6.45மணியளவில் இடம்பெற்றுள்ளது எனவும் மேலதிக விசாரணைகளை பளை பொலிசார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர். (4-6-100-316)

## பூநகரி காற்றாலை மின்னுற்பத்தி; மீண்டும் அனுமதி மறுப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் நேற்று அபிவிருத்திக்குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலை மையில் காலை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

அதானி குடும்பத்தின் முதலீட்டில் பூநகரிகௌதாரிமுனை பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்திற்கு மாவட்ட அபிவிருத்தி குழு அனுமதி வழங்குக மறுத்தது.

இரண்டு கூட்டங்களில் குறித்த நிலையத்தின் நன்மை தீமைகள் மற்றும் அபிவிருத்திகள் உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்ட பின்னர் அனுமதி வழங்குவது என, தீர்மானிக்கப்பட்டது.

இந் நிலையில் குறித்த கலந்துரையாடலில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களில் முழுமைப்படுத்தப்பட்ட நிலையில் கூட்டம் எந்தவித தீர்மானங்களும் இன்றி நிறைவடைந்தது இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், எஸ்.சிறிதரன், அங்கயன் இராமநாதன், அதானி குடும்பத்தின் பிரதிநிதிகள், உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (4-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 147

# இயந்திரத்தைக் கையாண்ட யுக்தி

கேரளாவில் ஒரு பெரிய தொழிற்சாலை கட்டப்பட்டு, அந்த ஆலை கட்டும் போது பெரும் பிரச்சினை ஏற்பட்டது.

பிரச்சினை என்னவென்றால் ஆலையில் கட்டப்பட்ட ஆழமானக் குழியின் அடிப்பகுதியில் மிகவும் கனமான இயந்திரம் வைக்கப்பட வேண்டும். ஆனால் இயந்திரத்தின் எடை ஒரு சவாலாக இருந்தது.

இயந்திரம் தளத்திற்கு வந்துவிட்டது, ஆனால் 30 அடி ஆழமான குழியில் அதை எவ்வாறு இறக்குவது என்பது பெரும் சிக்கலாக மாறிவிட்டது.

சரியாக நிறுவப்படவில்லை என்றால், அடித்தளம் மற்றும் இயந்திரம் இரண்டும் மிகவும் பாதிக்கப்படும்.

இறுதியாக, ஆலை கட்டும் நிறுவனம் கைவிட்டு, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண டெண்டர் விடப்பட்டது. இதனால், ஏராளமானோர், இந்த இயந்திரத்தை குழிக்குள் பொருத்துவதற்கான தங்கள் சலுகைகளை அனுப்பினர்.

கிரேன் வரவழைத்து இயந்திரத்தை பொருத்தி விடலாம் என நினைத்தனர். அதன்படி, பணியை முடிக்க, 10 முதல், 15 லட்சம் ரூபாய் வரைக் கேட்டனர். ஆனால் அந்த நபர்களிடையே ஒரு நேர்மையானவர் இருந்தார்.

இயந்திரம் தண்ணீரில் நனைந்தால், ஏதாவது பிரச்சனை வருமா?" என்று நிறுவனத்திடம் கேட்டார்.

இது இயந்திரத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது" என்று நிறுவனம் பதிலளித்தது.

அதன் பின், டெண்டரையும் நிரப்பினார். அனைத்து சலுகைகளையும் பார்த்தப் போது, அந்த நபர் வேலையை முடிக்க 5 லட்சம் ரூபாய் மட்டுமே கேட்டுள்ளார். எனவே வெளிப்படையாக, இயந்திரம் அமைக்கும் வேலை அவருக்கு வழங்கப்பட்டது. ஆனால் விசித்திரமான விஷயம் என்னவென்றால், இந்த நபர் இந்த வேலையை எப்படிச் செய்வார் என்பதை பகிர்ந்து கொள்ள மறுத்துவிட்டார்.

மேலும் அதைச் செய்வதற்கான திறமையும் சரியான குழுவும் தன்னிடம் இருப்பதாக மட்டுமே கூறினார்.

இந்த வேலையைச் செய்ய வேண்டிய திகதி மற்றும் நேரத்தைச் சொல்லுமாறு

அவர் நிறுவனத்திடம் கேட்டார். அந்த நாள் இறுதியாக வந்தது.

ஒவ்வொரு ஊழியரும், மேலாளரும், நிறுவனத்தின் முதலாளியும், சுற்றியிருந்தவர்களும் கூட, அந்த மனிதன் இந்த வேலையை எப்படிச் செய்வான் என்று தெரிந்துக் கொள்ள ஆர்வமாக இருந்தனர். அவர் தளத்தில் எந்தத் தயாரிப்பும் செய்யவில்லை.

சரி, முடிவு செய்த நேரத்தில், நிறைய லாரிகள் அந்தத் தளத்தை அடைய ஆரம்பித்தன. அந்த லாரிகள் அனைத்தும் பனிக்கட்டிகளால் ஏற்றப்பட்டிருந்தன. அவை அனைத்தும் குழிக்குள் நிரப்பப்பட்டன.

குழி முழுவதுமாக பனியால் நிரம்பியதும், இயந்திரத்தை நகர்த்தி பனி அடுக்குகளின் மேல் வைத்தனர். இதற்குப் பிறகு, ஒரு சிறிய தண்ணீர் பம்ப் சுவிட்ச் ஆன் செய்யப்பட்டு, குழியில் ஒரு குழாய் செருகப்பட்டது.

இதனால் தண்ணீர் வெளியே எடுக்கப்பட்டது. பனி உருகியது, தண்ணீர் தொடர்ந்து கொட்டியது, இயந்திரம் கீழே செல்லத் தொடங்கியது.

4-5 மணி நேரத்திற்குள் வேலை முடிந்து மொத்த செலவு ரூ.1 லட்சத்திற்கும் குறைவாகவே வந்தது. இயந்திரம் கச்சிதமாக பொருத்தப்பட்டு, அந்த நபருக்கு ரூ.4 லட்சத்துக்கு மேல் லாபம் கிடைத்தது.

வணிகம் உண்மையில் மிகவும் சுவாரஸ்யமான விஷயம். பிரச்சினைக்கு எளிய தீர்வைக் கண்டறிவது ஒரு கலையாகும், இது மனிதனின் விவேகம், புத்திசாலித்தனம் மற்றும் நடைமுறை புரிதலைப் பொறுத்து. கஷ்டமான பிரச்சனைகளுக்குக் கூட விவேகத்தின் மூலம் எளிய தீர்வுகள் கிடைக்கும்...

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்ட முன்னேற்றம் குறித்து கலந்துரையாடல்



(கொழும்பு)

அதானி டிரான்ஸ்மிஷன் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அனில் சர்தானா மற்றும் திட்ட நிர்வாகக் குழுவுடன் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர மன்னார் மற்றும் பூநகரியில் 500 மெகா வாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்தின் முன்னேற்றம் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்று முன்தினம் மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது இதனால் ஏற்படும் சவால்கள், திட்ட வரைபடம் மற்றும் திட்டத்தை நிறைவு செய்வதற்கான காலக்கெடு குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் தனது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த வருடம் டிசம்பருக்குள் இந்தத் திட்டத்தை முடிக்க தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

# நாட்டின் சில மாவட்டங்களில் மீண்டும் டெங்கு தொற்று அதிகரிப்பு

(கொழும்பு)

சில மாவட்டங்களில் மீண்டும் டெங்கு அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் டெங்கு நோயால் பலர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு, கண்டி, குருணாகல், புத்தளம், காலி மாவட்டங்களில் மீண்டும் டெங்கு காய்ச்சல் அபாயம் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் மழையுடனான வானிலையுடன் இந்த நிலை அதிகரிக்கக்கூடும் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார். இந்த ஆண்டின் இது வரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 43 ஆயிரத்து 346 பேர் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அவர்களில் 21 ஆயிரத்து 654 பேர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் நளின் ஆரியரத்ன கூறியுள்ளார். (4)

# பாடசாலை கல்வி உபகரணங்களின் விலைகள் நேற்று முதல் குறைப்பு

(கொழும்பு)

ரூபாவின் பெறுமதி அதிகரிப்பை கருத்திற் கொண்டு நேற்று முதல் உடற்பயிற்சி புத்தகங்கள் மற்றும் காகித பொருட்கள் உட்பட அனைத்து பாடசாலை உபகரணங்களின் விலையை 20% முதல் 25% வரை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில்துறையினர் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு வங்கி வட்டி குறைந்துள்ளமை காரணமாக இந்த பொருட்களின் விலை அடுத்த மாதத்தில் 35% முதல் 40% வரை குறையலாம் என சங்கத்தின் தலைவர் நிருக்ஷ குமார தெரிவித்தார். (4)

# மண்சரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்ட மற்றும் தெரணியகல செயலகப் பிரிவுகளுக்கு இரண்டு கட்டங்களின் கீழ் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தின் சீதாவாக்க, களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய மற்றும் கேகாலை மாவட்டத்தில் யட்டியந்தோட்டை பிரதேசங்களுக்கு முதல் கட்டத்தின் கீழ் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் நிவித்திகல, எஹெலியகொட, குருவிட்ட, கிரியெல்ல, இரத்தினபுரி, அலபாத, கலவான, பெல்மதுல்ல மற்றும் அயகம பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் முதல் கட்டத்தின் கீழ் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 120 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 300 | 500 |
| தக்காளி | 280 | 300 | 300 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 250 | 200 | 200 |
| கோவா | 400 | 260 | 300 | 300 |
| கரட் | 350 | 380 | 400 | 450 |
| பூசணி | 90 | 100 | 80 | 100 |
| புடோல் | 120 | 160 | 180 | 300 |
| வாழைக்காய் | 100 | 150 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 120 | 140 |
| பாகற்காய் | 400 | 450 | 500 | 600 |
| வெண்டக்காய் | 150 | 180 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 200 | 200 | 200 |
| பயற்றங்காய் | 400 | 350 | 400 | 300 |
| லீக்ஸ் | 360 | 260 | 400 | 400 |
| பீற்றூட் | 420 | 400 | 450 | 500 |
| கறிமிளகாய் | 380 | 450 | 450 | 500 |
| முருங்கைக்காய் | 1600 | 1600 | 1500 | 2000 |
| போஞ்சி | 550 | 500 | 550 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 80 | 120 | 160 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 80 | 100 |
| தேசிக்காய் | 350 | 350 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 90 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 260 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 420 | 350 | 500 | 700 |
| முள்ளங்கி | 160 | 180 | 160 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 35 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 200 | 200 | 240 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 203





வைஷ்ணவம் இந்தச் சோழ நாட்டில் நிலைத்து நின்று பரவப் போகிறது என்பதில் ஐயம் இல்லை. சைவ சமயத்துக்கு இங்கே செல்வாக்குப் பெருகுவதற்குப் பல காரணங்கள் உண்டு. நூறு வருஷ காலமாகச் சோழ குலத்து மன்னர்கள் புதிய புதிய சிவாலயங்களை நாடெங்கும் நிர்மாணித்து வருகிறார்கள்.

மூவர் பாடிய தேவாரப் பாசுரங்கள் அக்கோயில்களின் மூலமாகப் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றன. சிவாலயங்களில் தேர்த்திருவிழாக்கள் சிறப்பாக நடத்தப்படுகின்றன. இப்படியெல்லாமிருந்தும் திருமாலின் பெருமைக்கு யாதொரு குறையும் ஏற்படவில்லை. விஷ்ணுமூர்த்தியின் ஒன்பதாவது பரிபூரண அவதாரமாகிய கண்ணன், மக்களின் இதயத்தைக் கவர்ந்து விட்டான். கோகுலத்திலும் பிருந்தாவனத்திலும் வட மதுரையிலும் எம்பெருமான் நிகழ்த்திய லீலைகள் இவர்களுடைய உள்ளத்தில் குடிகொண்டு விட்டன.

அம்மம்மா! எத்தனை பாகவத கோஷ்டிகள்! எத்தனை வீதி நாடகங்கள்! எத்தனை விதவிதமான வேஷங்கள்! ஆம்முன்னம் நாம் பார்த்ததைக் காட்டிலும் இப்போது அதிகமாகவே இருந்தன. கோஷ்டிகளைச் சூழ்ந்து நின்று வேடிக்கை பார்ப்போரின் கூட்டமும் ஆரவாரமும் கூட அதிகமாகவே இருந்தன. பழையாறையைச் சுற்றிலுமிருந்த கிராமங்களிலிருந்து புதிய புதிய நாடக கோஷ்டியினர் வந்து கொண்டேயிருந்தார்கள்.

நாடக கோஷ்டி ஒன்றில் வஸுதேவர், தேவகி, கிருஷ்ணன், பலராமன், கம்ஸன் ஆகியவர்கள் வேஷம் தரித்துக் கொண்டு வந்தார்கள். பாட்டும், கூத்தும், வேஷக்காரர்களின் பேச்சும் இந்தக் கோஷ்டியில் அதிகமாயிருந்தபடியால் ஆழ்வார்க்கடியான் சற்று நின்று கவனித்தான். அப்போது கிருஷ்ணனுக்கும், கம்ஸனுக்கும் சம்வாதம் நடந்து கொண்டிருந்தது. கிருஷ்ணன் வேஷம் பூண்டிருந்தவன் சிறு பிள்ளை. அவன் மழலைச் சொல்லினால் கம்ஸன் செய்த குற்றங்களை எடுத்துக் கூறி, "வா, என்னோடு சண்டைக்கு!" என்று அழைத்தான். அதற்குக் கம்ஸன் உரத்த இடிமுழக்கக் குரலில், "அடே! கிருஷ்ணா! உன் மாயாவித்தனமெல்லாம் இனி என்னிடம் பலிக்காது. உன்னை இதோ கொல்லப் போகிறேன்.

உன் அண்ணன் பலராமனையும் கொல்லப் போகிறேன். உன் அப்பன் வஸுதேவனையும் கொல்லப் போகிறேன். அதோ நிற்கிறானே, உடம்பெல்லாம் சந்தனத்தைக் குழைத்து நாமமாகப் போட்டுக் கொண்டு அந்த வீர வைஷ்ணவனையும் கொன்றுவிடப் போகிறேன்!" என்று கூறியதும், சுற்றிலும் நின்றவர்கள் எல்லாரும் நமது ஆழ்வார்க்கடியானைப் பார்த்துச் சிரிக்கத் தொடங்கினார்கள். கிருஷ்ணன், பலராமன் வேஷம் போட்டிருந்தவர்கள் கூட அவனை நோக்கினார்கள். கூட்டத்தில் பலர் அவனை நெருங்கி வந்து சூழ்ந்து கொண்டு 'கெக் கெக்கே' என்று சிரிக்கவும் கேலி செய்யவும் ஆரம்பித்தார்கள்.

திருமலை நம்பிக்குக் கோபம் பிரமாதமாக வந்தது. கையிலிருந்த தடியைச் சுழற்றி அக்கூட்டத்திலிருந்தவர்களை ஒரு கை பார்த்துவிடலாமா என்று எண்ணினான்.

முக்கியமாக, அந்தக் கம்ஸனுடைய தலையில் ஒரு போடு போட விரும்பினான். ஆனால் கம்ஸனுடைய தலையில் அடிப்பதில் பயனில்லை. ஏனெனில் அவனுடைய சொந்த முகத்தை மறைத்துக் கொண்டு மரத்தினால் செய்து கோரமான மீசையும் கோரைப் பற்களும் வைத்து வர்ணத்தினால் எழுதியிருந்த பொய்த் தலையைக் கம்ஸ வேடக்காரன் வைத்திருந்தான்.

மொத்தத்தில் இவ்வளவு பெரிய கூட்டத்தில் தடியை உபயோகிப்பது நல்லதல்ல என்று திருமலை தீர்மானித்து அவ்விடத்தை விட்டு நழுவிச் சென்றான். அந்தக் கம்ஸனுடைய குரல், வேண்டுமென்று பெருங்குரலில் அவன் கத்தியபோதிலும் - எங்கேயோ கேட்ட குரலாக ஆழ்வார்க்கடியானுக்குத் அது தோன்றியது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மந்திர பொம்மை



மூன்று தங்க நாணயங்களை வைத்துக் கொண்டு ஆடம்பரமாகச் செலவு செய்ய ஆரம்பித்தார். பணம் தீர்ந்ததும், மீண்டும் பொம்மை மூலம் பொற்காசுகளைப் பெற்றுக் கொண்டே இருந்தார்.

திடீரென்று இந்தப் பொம்மையை யாராவது திருடிவிட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் தோன்றியது. மிகவும் பாதுகாப்பான இரும்புப் பெட்டி ஒன்றை வாங்கி, அதில் பொம்மையைப் போட்டுப் பூட்டி வைத்தார். ஆனாலும் திருப்தி இல்லை. பெட்டி அருகிலேயே இருந்தார். உழைப்புக்கு உதாரணமாக இருந்தவர், உழைப்பையே மறந்துவிட்டார்.

வேலை செய்யாமல் வீட்டிலேயே உட்கார்ந்து சாப்பிட்ட ரவியின் உடல் நலம் பாதித்தது. இதைப் பார்த்து அவரது நண்பர் வேலு வருந்தினார். மந்திர பொம்மையைப் பற்றியும் அறிந்துகொண்டார். அன்று இரவு ரவி தூங்கும்போது வீட்டுக்குள் நுழைந்தார். மந்திர பொம்மைக்குப் பதிலாகச் சாதாரண பொம்மையை வைத்துவிட்டார்.

மறுநாள் காலை கண் விழித்ததும் மந்திர பொம்மையை எடுத்தார் ரவி. வணங்கி, மண்ணைப் பொன்னாக மாற்றும்படிக் கேட்டார். ஆனால், மண் பொன்னாக வில்லை. அதிர்ச்சி அடைந்தார்.

"ஐயோ! திடீரென்று மந்திரம் வேலை செய்யவில்லையே இனி நான் என்ன செய்வேன்? ஒருவேளை நாளை வேலை செய்யலாம்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டார்.

ஒரு மாதம் ஆகியும் மந்திர பொம்மை வேலை செய்யவில்லை. இனி மந்திர பொம்மையால் பலன் இல்லை என்பதை உணர்ந்துகொண்டார். உணவுக்கு வழியில்லாமல் மீண்டும் வேலைக்குப் போக ஆரம்பித்தார். உடல் ஒத்துழைக்க வில்லை. மிகவும் கஷ்டப்பட்டார். இரண்டு மாதங்களுக்குப் பிறகு மீண்டும் பழைய ரவியாக மாறினார். கடினமாக உழைத்தார். எல்லோருக்கும் உதவினார்.

வேலு மந்திர பொம்மையுடன் வந்தார்." ரவி, என்னை மன்னித்துவிடு. உழைக்காமல் உடல் வேதனைப்படும் உன்னைக் குணமாக்கவே இந்தப் பொம்மையை எடுத்துச் சென்றேன். உழைக்காமல் வரும் பொருள் நிலைக்காது என்பதை உணர்ந்திருப்பாய். உழைத்தால் நோயின்றி மகிழ்ச்சியாக வாழலாம். உன் மந்திர பொம்மையை வைத்துக் கொள்" என்றார்.

"ஐயையோ எனக்குப் பொம்மை வேண்டாம். இப்போதுதான் நிம்மதியாக இருக்கிறேன். இதைத் துறவியிடமே கொடுத்து விடுகிறேன்" என்றார் ரவி.

அங்கு வந்த துறவி, "உழைப்பாளியான உன்னை இந்தப் பொம்மை சோம்பேறியாக்கிவிட்டதே! நல்லவேளை வேலுவால் நீ திருந்திவிட்டாய். இனி என்றென்றும் உன் வாழ்வில் மகிழ்ச்சி இருக்கும். உழைப்பால் இன்னும் உயரமான இடத்துக்குச் செல்வாய். இந்தப் பொம்மையை நான் எடுத்துக்கொள்கிறேன்" என்றார்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சாட்சியை ஏமாற்றாமல் வாழ்பவனே உண்மையான வீரன். அவனது வெற்றி உறுதியானது ! –ஜேம்ஸ் க்வார்க்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# மீண்டுமொருமுறை நாட்டை வங்குரோத்தடைய இடமளியோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்ப நாம் புதிதாக சிந்திப்போம். மீண்டுமொருமுறை நாட்டை வங்குரோத்தடைய இடமளியோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அம்பாறை பண்டாரநாயக்க மகளிர் கல்லூரிக்கு 50 இலட்சம் ரூபா பெறுமதியான நவீன பேருந்து வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வங்குரோத்தடைந்த நாட்டிலிருந்து நாம் மீள வேண்டும். மீண்டுமொரு வங்குரோத்து நிலைக்கு செல்லாமல் இருக்க எமது நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும்.

இவை எல்லாவற்றிற்குமுரிய பொதுப் புள்ளி அறிவாகும். இந்த அறிவை அடிப்படையாகக் கொண்டு செயல்பாடுகளை ஒழுங்கமைத்தால் வெற்றிகரமான இலக்குகளை எட்டலாம் என்றார்.

நாடும் வங்குரோத்தடையும் நிலைக்குச் செல்ல வேண்டிய தேவை ஏற்படாது. நாடு மீண்டும் வங்குரோத்து நிலையை அடையும் யுகம் உருவாகாமல் தடுப்பதே இந்தத் திட்டங்களின் நோக்கம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

திருட்டு, இலஞ்சம், ஊழல் ஒழிக்கப்படுவது மட்டுமின்றி, கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை நாட்டுக்கு கொண்டு வந்து, சுகாதாரம், கல்வி, விவசாயம் உள்ளிட்ட துறைகளுக்கு குறித்த நிதியை பயன்படுத்தி அத்துறைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அனைத்து திருடர்களும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் எனவும் எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அறிவை அடிப்படையாக கொள்ளாத உண்மைக்குப் புறம்பாக மக்களை ஏமாற்றும் ஆட்சித் தீர்மானங்களாலேயே முன்னைய அரசாங்கம் எமது நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்றதாகும். மீண்டும் இவ்வாறான அடிப்படைகளில் நின்று மக்களை ஏமாற்றும் காலத்தை தோற்கடிக்க வேண்டுமானால் அறிவை முன்னிலையாக் கொண்ட சமூகம் கட்டியெழுப்பப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார். (ம-7)

# தொல்லியல் திணைக்களத்தை இயக்குகின்ற மறைகரம் யார்?

தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் அநுர மனத்துங்க தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

அவரின் இராஜினாமாவுக்கான காரணம் என்ன என்பது அனைவரும் அறிந்ததே.

தமிழர் தாயகத்தில் தொல்லியல் திணைக்களம் செய்கின்ற அக்கிரமம் கொஞ்சமல்ல.

தமிழ் மக்களின் வாழ்விடங்களைக் கபளீகரம் செய்வது, தமிழ் மக்களின் வழிபாட்டுத் தலங்களை ஆக்கிரமித்து பௌத்த விகாரைகள் அமைப்பது என ஏகப்பட்ட நிட்டூரம் தொல்லியல் திணைக்களத்தால் அரங்கேறிய வண்ணமுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதியின் ஆசியுடனேயே தொல்லியல் திணைக்களம் அக்கிரமச் செயல்களில் ஈடுபட்டு வருகிறதென்ற நினைப்பு தமிழ் மக்களிடம் இருந்தது.

ஆனால் தமிழர் தாயகத்தில் தொல்லியல் திணைக்களம் செய்கின்ற அநியாயங்கள் ஜனாதிபதிக்குத் தெரியாமல் இருப்பதை இப்போது உணர முடிகிறது.

அதாவது தொல்லியல் திணைக்களம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவுகளை – அமைச்சரவையின் தீர்மானங்களைக் கூட மதிக்காமல் இயங்குகிறதெனும் உண்மை பணிப்பாளர் மனத்துங்கவின் பதவி விலகல் மூலம் தெரியவந்துள்ளது.

ஆம், கடந்த 8ஆம் திகதி ஜனாதிபதியுடன் நடந்த சந்திப்பின்போது, அமைச்சரவைத் தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் மனத்துங்க உடன்படவில்லை.

அதாவது இந்த நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவை ஏற்பதற்கு தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் மறுத்துரைத்தபோது, கடுப்படைந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்பாளரைக் கடுந்தொனியில் எச்சரித்தார்.

இதன் விளைவாக மனத்துங்க பணிப்பாளர் பதவியை நேற்று முன்தினம் (12) இராஜினாமாச் செய்துள்ளார்.

இங்கு அமைச்சரவையின் தீர்மானத்தை மதிக்காமல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவை ஏற்காமல் நடந்து கொள்கின்ற அளவில் தொல்லியல் திணைக்களத்துக்கு அதிகாரம் கொடுத்தது யார்? என்ற கேள்வி எழுகிறது.

இங்குதான் தொல்லியல் திணைக்களத்தின் பின்னணியில் ஒரு மறைகரம் இயங்குவது தெரியவருகிறது.

அதாவது ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களின் தீர்மானங்களை புறந்தள்ளி தமிழ் மக்களின் வரலாற்றுச் சிறப்பிடங்களைக் கபளீகரம் செய்வதையும் தமிழர் தாயகத்தில் பௌத்த விகாரைகளை அமைப்பதையும் தொல்லியல் திணைக்களம் மும்முரமாகச் செய்து வருகிறது.

இந்த அடிப்படையில், இந்த நாட்டை அதல பாதாளத்தில் வீழ்த்திய ஒரு பெரும் தீயசக்தியின் நிழல் அரசாங்கமாகத் தொல்லியல் திணைக்களம் செயற்படுகிறதா? என்ற ஐயவினா எழவே செய்கிறது.

எதுஎவ்வாறாயினும் தொல்லியல் திணைக்களத்தின் இனவாத போக்கை ஜனாதிபதி ரணில் தோல் உரித்துக் காட்டியதன் மூலம் அந்தத் திணைக்களத்தின் மீதான தமிழ் மக்களின் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் உண்மையானவை என்பது நிருபிக்கப்பட்டுள்ளது.

# ஈஸ்டர் தாக்குதல் பின்னணி உண்மைகள் விரைவில் வெளிவரும்

## பேராயர் கர்தினால்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்ள சிலர் தங்கள் சொந்தங்களை காட்டிக் கொடுக்கின்றனர்.

இந்நிலையில் அதன் பின்னணியில் உள்ள உண்மை விரைவில் வெளிவரும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் நேற்று தெரிவித்துள்ளார். கொச்சிக்கடையில் உள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் பாரம்பரிய வைபவ வழிபாடுகளில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள உண்மையை தெய்வீக சக்திகள் விரைவில் வெளிப்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார். உண்மையை மறைப்பவர்கள் நம்மை தவறாக வழிநடத்தலாம். இருப்பினும் நாங்கள் தவறான வழியில் செல்ல மாட்டோம்.

தாக்குதல்களுக்குப் பின்னால் இருந்தவர்கள் தங்கள் துரோகங்களைக் காட்டிக் கொடுக்கும் நிலையில், தெய்வீக உதவியுடன் உண்மை வெளிவரும் என்று கர்தினால் கூறியுள்ளார்.

தாக்குதல்களின் பின்னணியில் இருந்தவர்கள் இன்று உயர் பதவிகளை வகிக்கின்றனர் எனவும் கர்தினால் தெரிவித்துள்ளார்

அமைச்சர்கள் தினமும் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த முயற்சிப்பதுடன், உண்மையை மறைக்கவும் முயற்சிக்கின்றனர் என்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் குற்றம் சுமத்தியுள்ளார். (ம-7)

# கையூட்டல் பெற்றவர் கைது

(கொழும்பு)

கையூட்டலைப் பெற்றுக் கொண்ட இலங்கை போக்குவரத்து சபைக்கு உட்பட்ட தொழிற்சங்கம் ஒன்றின் செயலாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கையூட்டலுக்கு எதிரான ஆணைக்குழு அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். பொறுப்புக்களில் இருந்து விலக்கப்பட்டுள்ள தொழிற்சங்க செயற்பாட்டாளர்களின் மாதாந்த வேதனத்தை பெற்றுக் கொள்வதற்கு தேவையான கையெழுத்தை இடுவதற்காகவே அவர் கையூட்டலை பெற்றுக்கொண்டார்.

கைதானவர் இலங்கை போக்குவரத்து சபையின் சிரேஷ்ட சாலை பரிசோதகர் பதவியையும் வகிப்பவர் என கையூட்டலுக்கு எதிரான ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழன் காலை 8:30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** கே.எம்.கே. கடல் உணவு (பிரைவேட்) லிமிடெட், மூளாய் நாவற்குழி லிங்க்ஷ் ரெடிமிக்ஸ், அறுகுவெளி, ஐயனார் கோவிலடி, நாவற்குழி, கோகிலாகண்டி நாவற்குழி, மங்களா பட்டறை, கோகிலா கண்டித் துறை, மறவன்புலவு, கோவிலடி வீதி, தச்சன் தோப்பு, தனங்கிளப்பு, ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஆசிக்குளம், மகாறம்பைகுளம், சமயபுரம், நெளுங்குளம் நீர் வழங்கல் சபை, நந்தெனிய கல்லுடைக்கும் ஆலை, அறுகம்புல்வெளி, பாரதிபுரம், கூமாங்குளம், நாகரிலுப்பைக்குளம், நாகர் இலுப்பைகுளம், நெளுக்குளம் கலைமகள் பாடசாலையடி, நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பாண்சினன்குளம், பொன்னாவரசங்குளம், இராஜேந்திரகுளம், சாம்பல் தோட்டம் வீட்டுத்திட்டம், விநாயகபுரம் வீட்டுத்திட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# மர்மமாக உயிரிழந்த இளம் மருத்துவர்

(கொழும்பு)

தம்புத்தேகம அரச வைத்தியசாலையில் பணியாற்றிய 35 வயதுடைய திருமணமான வைத்தியர் ஒருவர் தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதாக தம்புத்தேகம தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்புத்தேகம வைத்தியசாலையின் சிறுநீரகப் பிரிவில் கடமையாற்றிய கொட்டப்பிட்டி நாரம்மல பகுதியைச் சேர்ந்த அமில சதகெலும் திசாநாயக்க (35) என்ற வைத்தியரே உயிரிழந்துள்ளார்.

மூன்று நாட்களாக வைத்தியர் பணிக்கு வருகை தராமையினால் வைத்தியசாலை ஊழியர் ஒருவர் வைத்தியரின் வீட்டிற்குச் சென்று பார்த்த போது அவரது அறையில் வைத்தியர் இறந்து கிடப்பதைக் கண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

உயிரிழந்த வைத்தியரின் மனைவி குருநாகல் வைத்தியசாலையில் பல் வைத்தியராக கடமையாற்றி வருவதுடன் குறித்த வைத்தியர் தனது ஐந்து வயது மகளுடன் அந்தப் பிரதேசத்தில் வசித்து வருகின்றார்.

உயிரிழந்த வைத்தியர் தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் தனியாக வசித்து வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர் அவர் உயிரிழந்திருக்க வேண்டும் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அவரது சடலத்தில் வெட்டுக்காயங்கள் போன்ற வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் பௌத்த வரலாற்றை ஏற்றுக் கொண்டார் ரணில்

## வரவேற்கிறார் மனோ எம்.பி

(கொழும்பு)

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நான் பாராட்டுகிறேன். முதன்முறையாக நாட்டின் தலைவர் இலங்கை தீவின் "தமிழ் பௌத்த வரலாற்றை" பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளார். இலங்கையின் வரலாற்றில் தமிழ் பௌத்த வரலாற்றுக்கு உரிய இடத்தை ஏற்றால், அது இன்று நாம் எதிர்கொள்ளும் அநேக பிரச்சினைகளுக்கு தீர்வு தரும் சாவியாகும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோகணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் மனோ கணேசன் எம்பி மேலும் கூறியுள்ளதாவது,

தமிழரசு கட்சியினருடனான கலந்துரையாடலின் போது தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

அதன்போது இலங்கை தீவின் "தமிழ் பௌத்த வரலாற்றை" பகிரங்கமாக ஏற்றுக் கொண்டு, ரணில் விக்கிரமசிங்க கருத்து கூறியுள்ளார்.



இப்படி ஒரு தமிழ் பௌத்த வரலாறு இருப்பதை சிங்கள தீவிரர்கள் எப்போதும் மறைக்க விரும்புகிறார்கள். தமிழ் பௌத்த வரலாறு அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டால், இன்று நாம் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் என்ற பூட்டுக்கு அது சாவியாக அமையும் என நான் நம்புகிறேன். இந் நோக்கில், 2018 ஆம் வருடம் நான் அமைச்சராக இருந்த போது ஒரு காரியம் செய்தேன்.

பிரபல சிங்கள வரலாற்றாசிரியர், சினிமா எழுத்தாளர் பேராசிரியர். சுனில் ஆரியரத்ன, இலங்கையின் தமிழ் பௌத்த வரலாற்றை பற்றி சான்றுகளுடன் எழுதிய, "தமிழ் பௌத்தன்" (தமிழ பௌத்தயா) சிங்கள நூல் நாட்டில் பாவனையில் இல்லாமல் இருந்தது. அந்த நூலை தேடிப் பிடித்து, பேசி, பேராசிரியரின் அனுமதியை பெற்று அதை எனது அமைச்சின் செலவில் மறுபிரசுரம் செய்து, நாட்டின் சிங்கள பாடசாலைகளுக்கும், விகாரைகளுக்கும் இலவசமாக அனுப்பி வைத்தேன்.

அதன்பின் பேராசிரியர் ஆரியரத்னவை அழைத்து சில வண. பிக்குகள் கண்டித்துள்ளார்கள், என அறிந்தேன். என்னுடன் முரண்பட எவரும் வரவில்லை.

இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை போட்டு கிழிப்பார்களோ தெரியவில்லை. அவரை அந்த கௌதம புத்தனும், கதிர்காமக் கந்தனும் காப்பாற்றட்டும் என தெரிவித்தார். (4)

# மோ.சைக்கிள் விபத்துக்களே அதிகம் இடம்பெறுகின்றன

## பொலிஸ் ஊடக பேச்சாளர்

(கொழும்பு)

இலங்கையில் இந்த ஆண்டின் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதிக்குள் இடம்பெற்ற விபத்துக்களால் 709 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதில் மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகளவில் பதிவாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரையான நிலவரப்படி, மொத்தமாக 8,202 விபத்துக்கள் நடந்துள்ளன. இந்த விபத்துகளில் 709 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால், மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்களே அதிகளவில் அடங்கியுள்ளனர்.

உயிரிழந்த 709 பேரில் 220 பேர் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் ஆவதுடன் 102 பேர் பயணிகள் ஆவர். அத்துடன் 179 பாதசாரிகளும் மரணித்துள்ளனர்.

இரண்டாவது அதிக விபத்துக்கள் முச்சக்கர வண்டிகளால் ஏற்படுகின்றன.

இதனால் வீதியில் நிகழும் விபத்துக்களில் பெரும்பாலானவை மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளால் இடம்பெற்றுள்ளவை என தெரியவந்துள்ளது.

எனவே, மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் மற்றும் முச்சக்கர வண்டி சாரதிகள் வீதியில் வாகனங்களை செலுத்தும் போது போக்குவரத்து விதிகளை பின்பற்றுவது மிகவும் அவசியமாகும் என நிஹால் தல்துவ வலியுறுத்தியுள்ளார். (4)

# சுற்றுலாப் பயணிகள் வருகை நாட்டில் தொடர்ந்து அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது.

அந்தவகையில் இம் மாதத்தின் முதல் 8 நாட்களில் மாத்திரம் 22,000 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருப்பதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் "கடந்த மே மாதத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் தினசரி வருகையானது சராசரியாக 2,675 ஆக இருந்துள்ளது. எனினும் இம் மாதத்தின் தினசரி வருகை சராசரியாக 2,775 ஆக அதிகரித்துள்ளது.

அதன்படி, கடந்த ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 8 ஆம் திகதி வரை மொத்த வருகையின் எண்ணிக்கை 546,686 ஆக உள்ளது. தற்போதைய வேகத்தை பேணினால், இம் மாத இறுதிக்குள் இலங்கைக்கு 600,000 சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் வாய்ப்பு உள்ளது.

ஆகவே இவ் வருட இறுதிக்குள் இரண்டு மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதை இலங்கை இலக்காகக் கொண்டுள்ளது" இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

# ஊடகங்களை நசுக்கும் சட்டம் அனுமதி வழங்க கூடாது

## அநுர வலியுறுத்து

(கொழும்பு)

ஊடகங்களை நசுக்கும் வகையில் அரசாங்கம் கொண்டு வர திட்டமிடப் பட்டுள்ள சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற அனுமதிக்கப்பட மாட்டாது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டி தொகுதி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அனுர குமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் நாட்டு மக்களின் தகவல்களை அறியும் உரிமையை அழிக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது, தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் தகவல்களை ஊடகங்கள் மூலம் பரப்புவது அந்த நிறுவனங்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தும்அந்த ஊடக நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களை இரத்து செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்த நாட்டில் தேர்தல்களை பிற்போடுவதன் மூலம் ஊடகங்களை அடக்கி ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகும் நோக்கில் ஜனாதிபதி செயற்பட்டு வருகின்றார்" அனுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (4)

# பாண் தொடர்பான கட்டளைச் சட்டத்தை இரத்துச் செய்ய அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

பாணின் விற்பனையை ஒழுங்குபடுத்தும் மற்றும் விற்பனைக்கு வழங்கப்படும் பாணில் கலப்படம் செய்வதைத் தடுக்கும் 1864 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தை இரத்து செய்ய இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அவசரச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில், வர்த்தக, வணிகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நலின் பெர்னாண்டோ சமர்ப்பித்த பிரேரணைக்கே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பாண் விற்பனையை ஒழுங்குபடுத்தல் மற்றும் விற்பனை செய்யப்படும் பாண்களுக்கு பழுதடைந்த மாவை கலக்கும் நடவடிக்கையை தடுப்பதற்கு இயலுமாகும் வகையிலான ஏற்பாடுகளை உள்ளடக்கி 1864 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பாண் கட்டளைச் சட்டம் விதிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டளைச் சட்டத்தின் சில விதிகள் 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டத்தின் விதிமுறைகளுடன் ஒத்துப்போகாததால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் விளக்கமளித்துள்ளது. இதனால், பாண் தொடர்பான கட்டளைச் சட்டத்தை தொடர்ந்து அமுல்படுத்த வேண்டிய அவசியமில்லை என அறிவிக்கப்பட்டது. (4)

# குழந்தைகளை வீதியில் விட்டு சென்ற கொடூரத் தாய்!

(கொழும்பு)

அம்பலாங்கொட பிரதேசத்தில் 6 மாத கைக் குழந்தையும் அவரது மூத்த சகோதரனான 6 வயது சிறுவனையும் தாய் ஒருவர் வீதியில் விட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த குழந்தைகளை முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

6 மாத குழந்தை பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், 6 வயதான குழந்தை தொடர்ந்தும் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த பிள்ளைகளின் தாய் தொடர்பில் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயுடன்...

கடந்த எட்டாம் திகதி அன்று வீட்டிலிருந்து வவுனியா நகருக்கு உடுபுடைவை வாங்குவதற்காக கணவனும் மனைவியும் சென்றுவிட்டு இரவு 7.00 மணியளவில் வீடு திரும்பி கொண்டு இருந்தபோது பாவற்குளம் வைத்தியசாலைக்கு முன்பாக வீதிக்கு குறுக்காக சென்ற நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் பின் இருக்கையில் இருந்து சென்ற மனைவி கீழே விழுந்து மயக்கமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மறுநாள் 9ஆம் திகதி காலை யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## மூவர் விசாரணை...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் தீபன் திலீசன், மகளிர் அணித் தலைவி வாசுகி சுதாகரன், மகளிர் அணி செயலாளர் கிருபா கிரிதரன் ஆகியோரை விசாரணைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு பொலிஸ் அழைப்பாணை விடுத்துள்ளது. (ம-7)

## வாகன இறக்கு...

ருமான மகிந்தானந்த அளுத்கமகே இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் குழுவின் கூட்டம் இடம்பெற்றபோது இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளினால் எதிர்பார்த்த வருமானத்தை சுங்கத்தினால் பெற முடியவில்லை என சுங்க அதிகாரிகள் தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருடம் 1226 பில்லியன் ரூபாய் வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் முதல் 5 மாதங்களில் 330 பில்லியன் ரூபாயே வருமானமாக கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இந்த மாதம் முதல் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கினால் எதிர்வரும் 6 மாதங்களுக்குள் 150 பில்லியன் ரூபாயை வரியாக பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் கடன் உதவி முறையின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வதன் ஊடாக அந்நிய செலாவணியை சேமிப்பதன் மூலம் சுங்க வருமானத்தை அதிகரிக்க முடியும் என சுங்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

## தேர்தல் தொடர்...

ராட்சி மன்ற வாக்களிப்பு கட்டளைச் சட்டம், ஜனாதிபதித் தேர்தலுக்கான விசேட ஏற்பாடுகள் சட்டம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் ஆகியவற்றில் திருத்தம் செய்வதற்கு கடந்த வருடம் டிசம்பர் மாதம் 12ஆம் திகதி அமைச்சரவை தீர்மானித்தது.

எவ்வாறாயினும், சட்டங்களை தனித்தனியாக திருத்துவதற்கு பதிலாக, புதிய தேர்தல் சட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி அதற்கான சட்டமூலமொன்றை தயாரிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன அறிவித்துள்ளார். (ம-7)

## பூநகரி காற்...

யாது என்றும் தெரிவித்தார்.

கௌதாரிமுனை காற்றாலை திட்டத்திற்கு அனுமதி வழங்குவது தொடர்பான விசேட கலந்துரையாடல் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களிலும், இன்றைய (நேற்று) சந்திப்பிலும் மக்கள் பிரதிநிதிகளினாலும் அதிகாரிகளினாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் - ஆலோசனைகள் மற்றும் வாதப் பிரதிவாதங்களின் அடிப்படையில் மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகளை தெளிவான முறையில் அடையாளப் படுத்தி, அவை நடைமுறைப்படுத்தப்படும் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர், ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் என்ற அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (ம-7)

## கியூ.ஆர் மூலம்...

நிகழ்வு பௌத்த லோக்கா மாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் கூட்டுத்தாபன விற்பனை நிலையத்தில், மொபிட்டல் நிறுவனத்தின் அனுசரணையுடன் நேற்றுக் காலை நடைபெற்றது.

நுகர்வோரிடம் பணம் இல்லாத சந்தர்ப்பங்களிலும் QR முறையின் கீழ் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடிய நிலைமை இதன் விசேட அம்சமாகும்.

இதேவேளை ஒவ்வொரு வாரத்திலும் ஒரு தினத்தில் விசேட விலைக் குறைப்பின் கீழ் ஒருவகை மீனை வழங்குவதற்கு கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது. (ம-7)

## நல்லைக்...

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேக தினமாகிய நேற்று மாலை சண்முக பெருமானுக்கு திருக்கல்யாண உற்சவம் இடம்பெற்று சண்முகப் பெருமான் வள்ளிநாயகி, தெய்வானையம்மை சமேதராய் வீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள் பாலித்தார். (ம-7,33)

## எமது...

காலி-ரத்கம பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியவுடன் அரசியலமைப்பின் ஊடாக ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம்.

ராஜபக்ஷர்கள் மீது திட்டமிட்ட வகையில் போலி குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

பொருளாதார முன்னேற்றம், அரசியல் ஸ்திரத்தன்மை உறுதிப்பாடு ஆகியவற்றுக்காகவே ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்கினோம்.

ஒரு மாற்றத்தைக் நோக்கி ஜனாதிபதி பயணிக்கிறார். அவரின் கொள்கை திட்டங்களை நிறைவேற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஒத்துழைப்பு அத்தியாவசியமானது.

இலாபமடையும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தல் என்பதை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். ரெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை தனியார் மயப்படுத்துவது பிரச்சினைக்குரியது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ரெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை வழங்குவது தேசிய பாதுகாப்புக்கு ஏதாவதொரு வழிமுறையில் பாதிப்பை ஏற்படுத்தும் என பல தரப்பினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்பு வழங்குவோம். அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு தொடர்பில் விரிவாக ஆராய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம் என்றார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

### ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 13/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1599
வெற்றி இலக்கங்கள்: தனுசு 9 8 3 4 5 8
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய
திகதி - 2023.06.13
சீட்டிழுப்பு இலக்கம் - 1174
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கங்கள்: 20 47 52 58

### கொவிசெத
திகதி 2023.06.13
சீட்டிழுப்பு இலக்கம் 3386
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கங்கள்: 20 24 26 74
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்
திகதி 13/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1492
வெற்றி எழுத்து: C
சுப்பர் இலக்க: 10
வெற்றி இலக்கங்கள்: 34 60 61 75

### HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.13
சீட்டிழுப்பு இலக்கம் 453
வெற்றி இலக்கம்: மேஷம்
வெற்றி இலக்கங்கள்: 36 50 59 62
மேஷம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத
திகதி 2023/06/13
சீட்டிழுப்பு இலக்கம் 5144
ஆங்கில எழுத்து: B
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 6 2 9 1 4 9
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2118
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.06.13
தினம் செவ்வாய்க்கிழமை
H 02 38 53 77
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,002,580/-
DLB

### சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.13
வெற்றி வாரம்: 4279
வர்ணம்: பச்சை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,164,771.80
வெற்றி இலக்கங்கள்: 15 25 49 66
ஆங்கில எழுத்து: E
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
DLB

### சசிரி
வெற்றி வாரம் 336
சீட்டிழுப்பு திகதி 2023.06.13
ஊதா
வெற்றி இலக்கங்கள்: 19 27 35
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,018,620/-
DLB

### ராசி அதிர்ஷ்டம்
திகதி 2023-06-13
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,765,155.40
வெற்றி வாரம் 3830
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள்: 06 45 49 62
ராசி
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,255,980/-
DLB

### லக்ஷபதி
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 14 06 15 74 77
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1294
வர்ணம் வெளிர் பழுப்பு
திகதி 2023.06.13 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 337,486,473.80
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### அட கோடிபதி
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 1944
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2023.06.13
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 52,084,713.60
வெற்றி இலக்கங்கள்: 02 29 37 44
ஆங்கில எழுத்து: V
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SMARTLEARNING
LEARN FROM ANY WHERE ANY TIME

**Online Institute**

**2024, 2025 ம் ஆண்டுக்கான A/L புதிய வகுப்புக்கள் ஆரம்பம்.**

- கணித விஞ்ஞான பிரிவு
- வர்த்தகப் பிரிவு
- கலைப்பிரிவு
- தொழில்நுட்பப் பிரிவு

Our Features:

18.06.2023

- Live Classes
- Automated online exams
- e.library
- Student Dashboard - My Class Room

**ADMISSION OPEN NOW**

Get Started www.smartlearning.lk

பாதுகாப்பான சூழலில் வீட்டிலிருந்தே கல்வி கற்றுக் கொள்ளும் வசதி.

தொடர்புகளுக்கு - 077 352 5087
யாழ்ப்பாணம் 077 374 7581

(15907)



**KPC** இருபாலை வீதி, கோண்டாவில் (ஐயப்பன் கோவில் அருகில்)

எம்மிடம் கல்வி கற்று A/L 2021 இல் வர்த்தகப்பிரிவில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டமாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



S.சத்தியா - 3A D.R-01 (J/V.G.H.S)
S.சாளினி - 3A D.R-22 (J/K.R.V)
S.ஜனுசன் - 2A, B D.R-28 (J/U.H.C)
M.தமிழினி - 2A,B D.R-29 (J/V.C.C)
J.ஆர்த்தி - 2A,B D.R-53 (J/U.L.C)
P.பிரசாந்தன் - 2A,B D.R-56 (J/K.R.V)
S.சாதனா - 2A,B D.R-64 (J/K.R.V)
V.பூஜா - 2A,B D.R-65 (J/V.C.C)
K.ஜனிஸ்ரன் - A,B,C D.R-117(J/V.C.C)
S.மயசுருதி - 2A,B D.R-123 (J/V.G.H.S)
K.கேதுசா - A,2B D.R-169 (J/K.R.V)
K.கௌதமி - 2A,B D.R-257 (J/J.H.L.C)

**A/L 2025 வர்த்தகப்பிரிவு ஆரம்பம்**

பொருளியல்: S.Jeyakumar
வணிகக்கல்வி : T.S.Richi
கணக்கீடு : A.T.Suren (15947)

15.06.2023 வியாழன் மாலை 3.30

தொடர்புகளுக்கு : 0777238597



**IELTS** Academic General UKVI

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 17)
நேரடி , zoom வகுப்புக்களாக

A1 **IELTS Life Skills** திருமணம் செய்து UK செல்வோருக்கானது
B1 **Skilled Worker Visa** மூலம் வெளிநாடு செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

புதிய பிரிவு ஆரம்பம் 12/6/2023-Mon,15/6/2023-Thu-9 am or 3 pm

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
DMI COMPUTER EDUCATION 0777 17 35 17 (C-6729)

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சிறுப்பிட்டி சந்தி மானிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |



**பணியாளர் தேவை**

கிளிநொச்சியில் இயங்கும் Lankan Tile Show Room இற்கு கீழ்குறிப்பிட்ட பணியாளர்கள் தேவை

- மனேஜர் Tile Show Room (ஆண்) சிங்களம் ஆங்கிலம் தெரிந்தவர்கள்
- கணக்குபதிவாளர் (ஆண்)
- பணியாளர்கள் ஆண் 2 பேர்
- விற்பனை முகவர்கள் Tile, cement (ஆண்)

இம்மாதம் 14, 15 ,16 ம் திகதிகளில் வதிவிடச்சான்றிதழ், குடும்ப அட்டை பிரதி, கல்வித் தகைமை சான்றிதழ், பிறப்பத்தாட்சிப்பத்திரம், அடையாள அட்டை பிரதி மற்றும் சான்றிதழ்களுடன் நேரில் சமூகமளிக்கவும்.

குரு காட்வெயார்
இல.175 கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.

(C-6730)



**SUBRA(14)**

சித்தன்கேணி

**A/L 2025 வர்த்தகப் பிரிவு**

ஆரம்பம் : 16.06.2023 வெள்ளி 04.00 Pm

| | |
|---|---|
| பொருளியல் | S.ஜெயகுமார் |
| கணக்கீடு | S.தவா |
| வணிகக்கல்வி | S.K.பாலசுபேஷ் |

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டில் பல வருட அனுபவத்தைக் கொண்ட ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை வலி. மேற்கில் SUBRA வில் மட்டுமே.

076 420 7927

(15947)


# மரண அறிவித்தல்



## திருமதி சரஸ்வதி குணலிங்கம்

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தி சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி குணலிங்கம் (12.06.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா-தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற குணலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் அனுஜா(பிரான்ஸ்), சுகந்தினி(கனடா), கலைமதி(பிரான்ஸ்),குமுதா (யாழ்ப்பாணம்), சபேசன் (குணலிங்கம் பல்பொருள் வாணிபம் ஆனைப்பந்தி சந்தி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நவராசா(பிரான்ஸ்), திலீபன் (கனடா), கலைச்செல்வன் (பிரான்ஸ்), கிருஸ்ணரூபன் (யாழ்ப்பாணம்), பவிதா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் பாலசுந்தரம் (இந்தியா) காலஞ்சென்றவர்களான நல்லதம்பி, பொன்ராஜ், கந்தசாமி, இரத்தினராசா மற்றும் இரட்ணகோபால்(லண்டன்) காலஞ்சென்ற யோகாம்பிகை மற்றும் கமலாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கோமளம், கமலேஸ்வரி, மகேஸ்வரி, கிறிஸ்ரபெல் காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் வசந்தா, திருமலர், சிவநேசன் காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் சண்முகநாதன் காலஞ்சென்றவர்களான கோமளாராணி, கந்தசாமி,ஜெயராணி மற்றும் ஞானசவுந்தரி காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் வரதலெட்சுமி, மகாதேவன் ஆகியோரின் மைத்துனியும் ராகவி, காவியா, செருந்தி, எழிலி, பொழிலன், இனியன், பிரமி, வைணவி, கஜய், சாயினிதா, சைமிரா, தீபிகா, தன்ஷிகா, அஸ்விகா, அபிஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2023) வியாழக்கிழமை அன்று மு.ப 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு மு.ப10.30 எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குணலிங்கம் பல்பொருள் வாணிபம்,
இல.298 நாவலர் வீதி,
ஆனைப்பந்தி சந்தி ,யாழ்ப்பாணம்.

(15948)

தகவல்:- குடும்பத்தினர்
சபேசன் (மகன்)
கிருஸ்ணரூபன் (மருமகன்)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15937)

076 825 7716 (ஆகாஸ்)



**வேலைவாய்ப்பு**

- சாவகச்சேரி மீசாலையில் இயங்கும் மருந்தகத்திற்கு வேலையாட்கள் தேவை.
- பரந்தனில் இயங்கும் விநியோக ஸ்தாபனம் ஒன்றிற்கு பட்டா சாரதி தேவை.

பரந்தனை சார்ந்து இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு

077 711 0329,077 245 4224

(15943)



**வேலையாட்கள் தேவை**

சித்தா ரெஜிபோம் டிசைனிங்

அச்சுக்கூட வீதி, கொக்குவிலில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு

- பெண் வேலையாட்கள் மற்றும்
- ஸ்கிரின் பிறிண்டிங் தெரிந்தவர்களுக்கு

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு

075 039 4357

(15674)


## துருக்கிக்கு விமான சேவை

(கொழும்பு)

துருக்கிய எயார் லைன்ஸ் இஸ்தான்புல், மற்றும் இலங்கையின் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு இடையே நேரடி விமான இணைப்புகளை அக்டோபர் முதல் தொடங்க திட்டமிட்டுள்ளது.

இதன் மூலம், விமானப் பயணிகள், துருக்கியின் இஸ்தான்புல்லில் இருந்து உலகின் 129 நாடுகளுக்கு குறுகிய விமான இணைப்பு நேரத்தின் மூலம் எளிதாகப் பயணிக்க வாய்ப்பு உள்ளது.

(ம-7)


**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

VISA
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவீஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

(C-6733)



**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-6733)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org